விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 22 திங்கட்கிழமை (08.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## உலுப்புகிறது இந்தியா

# மகிந்த-சம்பந்தன் இரகசிய சந்திப்பு!

## டிசம். 20 இற்குப் பின் பேச்சு

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அலரி மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

இவர்கள் இருவரும் எவ்வித உதவியாளர்களும் இன்றி அரை மணித்தியாலத்திற்கு மேலாக ஆலோசனை நடத்தியதாகவும், இப் பேச்சுவார்த்தை மிகவும் திருப்திகரமானதாக அமைந்ததாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இச் சந்திப்புத் தொடர்பில் அரசாங்கத் தரப்பிலிருந்தோ அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தரப்பிலிருந்தோ இதுவரை செய்திகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் இச் சந்திப்புக் குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனும் சுமார் அரைமணி நேரம் தனியாக ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து இந்த இரகசிய ஆலோசனைகளில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்பு பிள்ளையான் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவித்துள்ளது. வடக்கு கிழக்கை மீள இணைப்பதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எனினும் வடக்கு கிழக்கு மீள இணைக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாதென பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எதிர்த்துள்ளனர்.

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட ஏனைய கட்சிகள் வடக்கு கிழக்கை மீள இணைக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கை மீள இணைப்பது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நிலைப்பாடு காரணமாக கூட்டமைப்பினால் தீர்வு ஒன்றை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ந-5)



வெலிக்கடைச் சிறையில் நேற்று பொலிஸார் மீது கைதிகள் தாக்குதல் நடத்தினர். இச்சம்பவத்தையடுத்து வெலிக்கடைச் சிறையில் பொலிஸாரும் அதிரடிப்படையினரும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம். (விரிவான செய்தி 5ஆம் பக்கத்தில்)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு!

### முயற்சி நடப்பதாக லங்காதீப தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர சில சக்திகள் முயற்சி மேற்கொண்டு வருவதாக லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது. நாட்டின் படைச் சேனாதிபதியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு சர்வதேச நீதிமன்றத்திலும் பிரிட்டன் நீதிமன்றத்திலும் போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்த முயற்சிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்தரணிகள் குழாமொன்று வழக்குத் தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இந்த முயற்சிகளுக்கு பின்னணியில் இலங்கையைச் சேர்ந்த அரசியல் சக்திகள் பலவும் (16ஆம் பக்கம் பார்க்க)

## புதையல் தோண்டிய இராணுவத்தினர் கைது

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான், முனியன்கட்டு பிரதேசங்களில் புதையல் கொள்ளையில் ஈடுபட்ட இராணுவ லெப்டினன்ட் உள்ளிட்ட ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முனியன்கட்டு வாவிக்கு அருகாமையில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்கப் பிரதேசத்தில் இந்தப் புதையல் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் இருப்பதாகக் கூறி நெடியவன் நிதி சேகரிப்பு

### முயற்சி தோல்வி என்கிறார் ரொஹான்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழக்கவில்லை எனப் பிரசாரம் செய்து, அதன் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நிதிதிரட்டும் முயற்சி தோல்வியைத் தழுவியுள்ளதாக பயங்கரவாத தடுப்பு தொடர்பான நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

நோர்வேயை மையமாகக் கொண்டு இயங்கி வரும் பேரின்பநாயகம் சிவகரன் எனப்படும் நெடியவன், பிரபாகரன் உயிருடன் இருப்பதாக பிரசாரம் செய்து அதன் மூலம் நிதி திரட்டுவதற்கு முனைப்பு காட்டிவந்தார்.

எனினும் இந்த முயற்சி தோல்வியடைந் (16ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்களை சமர்ப்பியுங்கள்

### பிரிட்டனிடம் கேட்கிறது இலங்கை

(கொழும்பு)

போர்க் குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு பிரிட்டனிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசங்கம் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சுமத்துவதற்குப்போதியளவு ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு பிரிட்டனிடம் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் நிகால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவதனை விடுத்து ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தலையீட்டை தடுக்க முயற்சி பாக். உடன் கைகோர்க்கிறது இலங்கை

### ஜனாதிபதி சர்தாரி கொழும்பு வருகிறார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுடன் உறவு வைப்பதற்காக இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனொரு கட்டமாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ளார்.

இங்கு வரும் சர்தாரி, இலங்கையின் பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் பாதுகாப்பு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடவுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியை ஏற்கவுள்ள மகிந்த ராஜபக்ஷ அதன்பின் சந்திக்கின்ற முதலாவது வெளிநாட் (16ஆம் பக்கம் பார்க்க)




நாளை (09.11.2010) சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்...
ஆன்மீகப் போராட்ட 19ஆம் ஆண்டுப் பூர்த்தி வழிபாடு
ஆன்மீகத்தின் உச்சநிலையை அனைத்து மக்களும் அனுபவித்து உணர வேண்டும் – முன்னாள் ஜனாதிபதி
பி.ப.3.00 மணியளவில் விசேஷ அபிஷேகம், பூசை, வழிபாடு, சுவாமி வீதியுலா. இரவு 7.00 மணியளவில் ஆன்மீகப் போராட்டம் விரைவாக வெற்றிபெற இறையருள் வேண்டி விடிவிளக்குகள் 108 ஏற்றிவைக்கப்படும். – சோழியூரான் பிறைசூடிக்குரு
(2814)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈழத் தமிழர்களுக்கு தனியாக நின்று என்னால் எதுவும் செய்ய முடியாது

## தொல்.திருமாவளவன் மனக் குமுறல்



விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவரும் எம்.பியுமான தொல். திருமாவளவன் இந்திய நாடாளு மன்றக் குழுவுடன் இலங்கை வந்து சென்ற சில நாட்களின் பின் இந்திய தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்திருந்தார்.

அவர் அளித்த பேட்டியின் விபரம் தற்போது வெளியாகியுள் ளது.

**கேள்வி** – ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து ஈழத் தமிழர் களுக்கு என்ன செய்தீர்கள்.

**பதில்** – எதுவும் செய்யவில்லை. செய்யவும் முடியாது. நான் தனியாக எதுவும் செய்ய முடியாது. நாடாளு மன்றத்தில் 5 பேர் இருந்தால் தான் குரூப். 8 பேர்இருந்தால் தான் பார்ட்டி. நான் தனி ஆளாக இருந்து எதுவும் செய்துவிட முடியாது. அப்படி இருந் தும் பேராடி சில சமயம் பேசியிருக் கிறோம்.

**கேள்வி** – இலங்கையில் ராஜபக் ஷவைச் சந்தித்தபோது நல்லவேளை இவர்(திருமாவளவன்) பிரபகரனுடன் இல்லை. இருந்திருந்தால் இவரை யும் மேலே அனுப்பியிருப்போம். என்று சொன்னார் இதற்கு நீங்கள் என்ன பதிலளித்தீர்கள்?

**பதில்** – சிரிச்சுக்கிட்டேன்; அவ்வ ளவுதான். அவை நாகரிகம் கருதி அப்படி நடந்துகொண்டேன். டிஆர். பாலுவுடன் ராஜபக்ஷே பேசிக் கொண் டிருந்தபோது என்னைக் காட்டி அப்படி சொன்னார்.

**கேள்வி** – ராஜபக்ஷ் கேட்ட போது மௌனமாக இருந்துவிட்டு இங்கே வந்த இரண்டாவது நாளே சென்னை உயர்நீதிமன்றத்தின் முன் அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தீர்கள் இது கபட நாடகம் என்று விமர்சனம் இருக்கிறதே?

**பதில்** – பிரபாகரனைக் காலிபண் ணிவிட்டேன் என்று ஆணவத்தில் அப்படி சொன்னார். பிரபாகரனுக்கு நான் நெருக்கமாக இருந்தது தெரி யும் என்கிற அர்த்தத்தில் தான் அப் படிச் சொன்னார்.

அதை நான் தவறான கண் ணோட்டத்தில் பார்க்கவில்லை. இங் கிருந்து 10 பேர் சென்றிருந்தோம். அதில் நான்தான் சிறுவன். நான் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேச முடியுமா? எனக்கென்று ஒரு பக்கு வம் இருக்கு. முதிர்ச்சி இருக்கு. அதையும் தாண்டி நான் என்ன ரவுடியா? அவருடன் சண்டை போட?

**கேள்வி** – நீங்கள் இலங்கை சென்றிருக்க வேண்டாம் என்ற கருத்து நிலவுகிறதே.

**பதில்** – அவர்(ராஜபக்ஷ) இப்படி கமெண்ட் அடிப்பார் என்று எனக்கு தெரியுமா? என் மக்களைச் சந்திக் கவே நான் சென்றேன். எங்கள் குழுவுக்கு ஒரு தலைவர் இருந்தார். அவர் அனுமதிப்படிதான் ஒவ்வொரு வரும் பேசினேம்.

**கேள்வி** – ராஜபக்ஷ உங்க ளுக்கு பணம் கொடுத்து வாயை அடைத்துவிட்டார் என்று பேசப்படு கிறதே?

**பதில்** – நான் மட்டுமல்ல; இங்கி ருந்து சென்ற அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களும் ராஜபக்ஷ வீட்டில் தேநீர் கூட குடிக்கவில்லை. வெளியுறவுத்துறை அமைச்சர் இல் லத்தில் சந்திப்பை முடித்துவிட்டு கிளம்பியபோது ஒரு நீளமான கவர் கொடுத்தார்கள். பிரித்துப் பார்த்தால் அது தேயிலைத்தூள் பாக்கெட். மற்றப்படி எனக்கு மட்டுமல்ல வேறு யாருக்குமே எதுவும் கொடுக்க வில்லை. (ந-5)

# கந்தசஷ்டி காலத்தில் நல்லூரில் வீதித்தடை

## பிற்பகல் வேளை அமுலுக்கு வரும்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 6ஆம் திகதி ஆரம்ப மாகி தொடர்ந்து ஆறு நாட்கள் நடை பெறும் கந்தசஷ்டியையொட்டி நல் லூர் கந்தசுவாமி கோயிலுக்கு பெரும் திரளான அடியார்கள் வருகை தரு வதால் வாகன நெரிசலை தவிர்க் கும் வகையில் பிற்பகல் வேளை யில் வீதித்தடை அமுல் படுத்தப்பட வுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித் துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப் பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

நல்லைக்கந்தனின் வருடாந்த உற்சவகாலங்களில் ஏற்படுத்தப்பட்ட வீதித்தடைகளையொத்த விதமான வீதித்தடைகள் தினமும் பி.ப. 3.00 மணி முதல் பி.ப. 6.00 மணிவரை யும் பின்வரும் இடங்களில் அமைக் கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள் ளன.

1. அரசடிச்சந்தி.
2. கோவில் வீதி சங்கிலியன் வீதி சந்தி.
3. பருத்தித்துறை வீதியில் மாநகர. சபை அலுவலகத்திற்கு முன்பாக.
4. செட்டித்தெரு செட்டித்தெரு ஒழுங் கைச்சந்தி.
5. பிராமணக்கட்டுக்குளம் (GTZ அலுவலகத்துக்கு முன்பாக.)

மேற்படி தற்காலிக வீதித்தடை களை அனுசரித்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர், மினி பஸ் சங்கத்தினர், பாதுகாப்பு பிரிவி னர் மற்றும் பொலிஸார் ஆலயச் சூழலை அண்டியுள்ள வீதிகளூடாக வாகனப் போக்குவரத்தினை நிறுத்தி மாற்று வழியைப் பயன்படுத்துவ தன் மூலம் கந்தசஷ்டி திருவிழா மிக அமைதியாகவும், பக்திபூர்வமாக வும் நடந்தேறுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

# தேசிய மட்ட ஆங்கில தினப்போட்டிகள் அடுத்த வருடத்தில் நடைபெறும்

(மன்னார்)

மன்னாரில் கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெற்ற 2010ஆம் ஆண்டிற்கான வடக்கு மாகாண ஆங்கில தினப் போட்டி களில் முதல் இரண்டு இடங்களி லும் வெற்றிபெற்ற மாணவர்களுக் கான தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் அடுத்தவருடம் நடை பெறவுள்ளது.

எனினும் நேற்று முன்தினம் சனிக்கிழமை வலம்புரியில் வெளி யாகிய செய்தியில் 2010ஆம் ஆண் டிற்கான வடக்கு மாகாண ஆங்கில போட்டி முடிபுகளின் பிரகாரம் முதல் இரண்டு இடங்களையும் பெற்றவர் களுக்கு தேசிய மட்ட ஆங்கிலத்தினப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் எதிர்வரும் 13, 14ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் என தவறு தலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டதென் பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

2009ஆம் ஆண்டுக்குரிய தேசியமட்ட ஆங்கில தினப் போட்டி களே தற்போது கொழும்பில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோட்டைக்காடு சாளம் பை விழுதுகள் சமூக அபிவிருத்திக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்டத்தில் தலை சிறந்த ஆசிரியர்களின் வழி காட்டலுக்கு அமைய க.பொ.த. (சாதாரணதர) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்று திங் கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை யா/கோட்டைக்காடு அ.த. க.பாடசாலையில் நடைபெறும். (ந-5)

# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு பல கோடி ரூபா. நிதி ஒதுக்கீடு

## யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிப்பு



யாழ்.மாவட்டத்தின் அபிவிருத் திக்கென பல கோடிரூபா நிதி ஒதுக் கீடுசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களின். அடிப்படைத் தேவைகள் மட்டுமின்றி யாழ். மாவட்ட அபிவி ருத்திகளும் முன்னெடுக்கப்படும் என யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக கட்டி டத் திறப்பு விழாவில் சிறப்பு விருந் தினராக கலந்து கொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் தோற்றுப்போன சமூக மல்ல. மீண்டெழுச்சி பெறும் சமூகம். நல்லூர் பிரதேச செயலகம் போன்று மருதங்கேணி, நெடுந்தீவு, உடுவில் சண்டிலிப்பாய், காரைநகர் போன்ற பல்வேறு இடங்களில் பிரதேச செய லகங்கள் மிகவிரையில் அமைக் கப்படும்.

நல்லூர் பிரதேச செயலக கட் டிடம் 60 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது எமது நல்லூர்ப் பகுதியின் அபிவிருத்தி யின் வெளிப்பாடாகும். நல்லூர் பிரதேச செயலகம் போன்று ஏனைய பகுதிகளிலும் 60 மில்லியன் ரூபா செலவில் கட்டிடங்கள் அமைக்கப் படும்.

இவை தவிர மக்களின் அடிப் படைத் தேவையான குடிநீர் விநி யோகத்திற்காக இரண்டாயிரத்து 225 மில்லியன் ரூபாவும், வீதி புன ரமைப்புக்காக ஆயிரம் மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது என்றும் தெரிவித்தார். (ந-6)


## மகேஸ்வரி நிதியம்

**பூநகரி மணலினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக**

பூநகரி பிரதேசத்திலிருந்து அகழப்படும் மணலினை பெற்றுக் கொள்ள விரும்புவோர் மேலதிக அனுமதிகள் ஏதும் இன்றி (கிராம சேவகர், பிரதேச செயலகம்) மகேஸ்வரி நிதியத்தில் நேரடியாக இன்று முதல் பதிவு செய்வதன் மூலம் உடனடியாக இம் மண லினை பெற்றுக்கொள்ள முடியும்.

**த.றஜீவ்** (சி-1573)
**செயற்திட்ட இணைப்பாளர், மகேஸ்வரி நிதியம்.**


# மரண அறிவித்தல்



## முருகன் கதிரவேலு

(யாழ்.சுப்பிரமணிய பூங்கா ஓய்வுபெற்ற ஊழியர்)

**கோண்டாவில் வடக்கு, கோண்டா விலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட முருகன் கதிரவேலு 06.11.2010 நேற்று முன்தினம் சனிக் கிழமை காலமானார்.**

**அன்னார் மின்னல்கொடியின் அன் புக் கணவரும் தனசேகரம், நகுலேஸ் வரன், மகேந்திரன் (லண்டன்),ரஞ்சி, யசோ ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.11.2010) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோட்டைக்காடு இந்து மயானத்தில் தக னம் செய்யப்பட்டது.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.**

கோண்டாவில் வடக்கு,
ஸ்ரீவாகீஸ்வரி,
கோண்டாவில். (2817)

தகவல்
குடும்பத்தினர்.
தொ.பே– 0779589801

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1931 | 2010 |
| 01 | 10 |
| 10 | 09 |

**அமரர் பதுமநிதி அருணாசலம்**

நீங்கா நினைவில் நிறைந்த அம்மாவே!
மாதம் ஒன்று வந்ததுவே மறைந்து நீங்கள் சென்று!
மாசில்லா மாமணியே! மங்காத சுடர் ஒளியே!
புகழ் பூத்த பொன்மகளே போனஇடம் எங்கம்மா ?
பூவொடு பொட்டும் பொன்தாலிக் கழுத்துடனும்
சீரோடு சென்ற சிறப்பான எம்தாயே!
தாய் இல்லாப் பிள்ளைகளாய் தரணியில் வாழ்கின்றோம்
துணை இழந்து ஐயாவும் சோர்ந்து விட்டார் அம்மாவே!
தேடி அலைகின்றார் திக்கெல்லாம் தேடுகின்றார்
எம் தாயே! உன் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்
இறைவனையே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"அருணோதயம்"
குளப்பிட்டி
கொக்குவில்

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

(சி-1572)


செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**தொடர்பிற்கு :–**

**0770452612** (2809)



**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவ னத்துக்கான கௌரவத்தையும் நம்பிக் கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
**Daanston House**
**Colombo -03**
**T.P. 072 9994777**

# இன்று ஒரு தகவல்

## தந்திரம்

இந்த உலகத்தில் எத்தனையோ விதமான மிருகங்கள் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான குணம்.

இதில் தந்திரத்துக்கு பெயர் போனது நரி.

மனதில் சிலரை"அதோ இருக்கிறாரே, அவர் சாதாரண ஆளில்லை குள்ளநரி. அவரிடம் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள். ஏமாந்து போய் விடாதே!" என்று சொல்வதுண்டு.

அது சரி... நரித்தந்திரம் என்றால் அது எப்படியிருக்கும்? அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில், சீன தேசத்துக் கதையொன்று சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு காட்டில் ஒரு நரியும் ஓநாயும் நண்பர்களாக இருந்தன.

இந்த இருவரில் யாருக்கு என்ன கிடைத்தாலும் அதைப் பங்கு போட்டு இரண்டு பேரும் சாப்பிடுவார்கள்.

ஒரு நாள் ஓநாய் வேட்டைக்குப் போன இடத்தில் 2 முயல்கள் கிடைத்தன. அவற்றை அடித்துக் கொண்டு வந்து நரியிடம் கொடுத்தது.

" இதை நன்றாக சமைத்து வை. நான் போய் நம்முடன் சேர்ந்து சாப்பிடுவதற்கு ஒரு விருந்தாளியைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு போய்விட்டது.

அந்தக்காட்டில் வயதான கரடியொன்று இருந்தது.

அது இவர்களிருவருக்கும் நண்பன். அதைக் கூட்டிக் கொண்டு வரத்தான் ஓநாய் போயிருக்கிறது.

ஓநாய் போனவுடன், நரி சமையல் செய்ய ஆரம்பித்தது. இரண்டு முயல்களையும் சமைத்து முடித்தது.

ஓநாய் இன்னும் திரும்பி வரவில்லை. ஆனால் நரியால் நாக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எவ்வளவு நேரம்தான் முயல் கறியை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியும்?

அதில் கொஞ்சம் எடுத்து சாப்பிட்டது. மிகவும் ருசியாக தெரிந்தது. சிறிது நேரத்தில் ஒரு முயலை காலி பண்ணி விட்டது.

இன்னும் ஓநாயும் கரடியும் வந்து சேரவில்லை. நரியால் பொறுமையாக இருக்க முடியவில்லை. மற்ற முயலையும் சாப்பிட்டு விட்டது.

அதற்குப்பின் யோசிக்க ஆரம்பித்தது.

ஓநாய் திரும்பி வந்ததும் ' முயல் எங்கே?' என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்வது?

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும் போது ஓநாய் வேகமாக வந்து சேர்ந்தது.

" இதோ பார். நம்முடைய விருந்தினர் கரடியார் பின்னால் வந்து கொண்டிருக்கிறார். நீ அந்த முயலை எடுத்து ஒரு தட்டில் வை. அதைத் துண்டு போடுவதற்கு நான் கத்தியைத் தீட்டிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு மரத்தடிப் பக்கமாகப் போனது. ஓநாய் கத்தியைக் தீட்டிக் கொண்டிருக்கிறது. நரி அங்கே புத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் கரடியார்வந்து வாசற்படியில் நின்றார். நரி பார்த்தது.

"ஐயோ! பாவம்!" என்றது.

" ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டது கரடி.

" உனக்கு ஒரு விடயம்தெரியாதா? இன்றைக்கு உன்னுடைய இரு காதுகளையும் வெட்டி எடுத்து அதைப் பொரித்து சாப்பிட வேண்டும் என்பதுதான் ஓநாயின் திட்டம்" என்றது நரி.

கரடி பயந்து கொண்டே காதைத் தடவிப் பார்த்தது.

" அப்படியா சங்கதி?" என்றது.

"ஆமாம். அதோ பார்! அந்த மரத்தடியில் ஓநாய் கத்தியைத் தீட்டிக் கொண்டிக்கிறது." என்று காட்டியது நரி.

" சரியான நேரத்தில் என்னைக் காப்பாற்றினாய். மிகவும் நன்றி" என்று சொல்லிவிட்டு அந்தக் கரடி வேகமாக நடக்க ஆரம்பித்தது.

அதன்பின் நரி ஓநாயிடம் வந்தது.

" விடயம் தெரியுமா உனக்கு?" என்றது.

"என்ன?" என்று கேட்டது அது.

" அந்தக் கரடியார் இரண்டு முயல்களையும் தூக்கிக் கொண்டு ஓடுகிறார். இது நியாயமா?" என்றது.

அடுத்த விநாடியே கரடியைத் துரத்திக்கொண்டு ஓட ஆரம்பித்தது.

கரடி திரும்பிப் பார்த்தது. ஓநாயின் கையில் கத்தி இருந்தது. இன்னும் வேகமாக ஓடியது.

ஓநாய் விடவில்லை.

" ஒன்றை மட்டுமாவது என்னிடம் கொடு" என்று கத்திக் கொண்டே ஓடியது.

இது காதில் விழுந்ததும் கரடி இன்னும் வேகமாக பறக்க ஆரம்பித்தது.

நரி,இவை இரண்டையும் எப்படி ஓட விட்டது பார்த்தீர்களா?

இதுதான் நரித்தந்தரம்.

நரிமற்றவர்களை ஓடவிட்டு முட்டாளாக்கியது.

மனிதன் மற்றவர்களை இருந்த இடத்திலேயே முட்டாளாக்கி விட்டான்.

நரியை விட இவன் கெட்டிக்காரன். ஒருத்தர் என்னைத் தேடி வந்தார்.

" சேர்,இங்கே யாரே ஒரு முட்டாள் இருக்கிறாராம். யார் என்ன கேட்டாலும் ' தெரியாது' என்றே சொல்லிக் கொண்டு இருக்கிறாராமே! உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

நான் உடனே "தெரியாது" என்றேன்.

" அப்படியென்றால் அது நீங்கள்தான் சேர்" என்று சொல்லிவிட்டு ஓட ஆரம்பித்தார்.

அந்த ஓநாய் மாதிரி என்னால் ஓடமுடியவில்லை.

பேசாமல் உட்கார்ந்து விட்டேன்.

அவர்அப்படியொன்றும் தப்பாகச் சொல்லிவிடவில்லையே!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு, தெற்கில் புனர்வாழ்வு நிலையங்களை நிறுவ அமெ.தொண்டு நிறுவனம் திட்டம்

(கொழும்பு)

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டனின் உதவியுடன் செயற்பட்டுவரும் அரச சார்பற்ற தொண்டர் அமைப்பு ஒன்று வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் இரு புனர்வாழ்வு முகாம்களை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது வடக்கிலும், தெற்கிலும் அரசுடன் இணைந்து இரு புனர்வாழ்வு முகாம்களை அமைப்பதற்கு அமெரிக்கத்தொண்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உளவியல் மற்றும் உடல் ரீதியான உதவிகளை வழங்கும் நோக்கத்துடன் இது அமைக்கப் படுவதாக அரசின் ஆதரவுடன் இயங்கும் உடல் உளவியல் சமூக புனர் வாழ்வு அமைப்பின் தலைவர் குமார்லால் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மன்னார் மற்றும் தங்காலை ஆகிய பகுதிகளில் இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் கண்ணி வெடிகளால் ஏற்பட்ட காயங்கள் மற்றும் உளவியல்தாக்கங்கள் ஆகியவற்றிற்கு சிகிச்சைகளை வழங்கும் உபகரணங்களை கொண்டதாக இந்த நிலையங்கள் அமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். உலகின் ஏழை நாடுகளில் வாழும் 300 மில்லியன் மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்காக கிளின்டனின் இந்த அமைப்புசேகரித்துள்ள60மில்லியன் டொலர்களை பயன்படுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இராசி பலன்

08.11.2010

(ஐப்பசி 22, திங்கட்கிழமை)

துதியை முற்பகல் 9.00 மணி வரை

அனுசம் முற்பகல் 11.23 மணி வரை

இராகுகாலம் 7.35 -9.05 மணி வரை

சுபநேரம் 12.05-1.35 மணி வரை

**மேடம்** மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்,மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடும், கொடுக்கல், வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் கூடிய கவனம் தேவை.

**இடபம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், மகிழ்ச்சியான செய்தியொன்று காலை நேரத்திலேயே கேட்கும் சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**மிதுனம்** மாற்று கருத்துடையோர் மனம் மாறும் நாள், கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட அச்சுறுத்தல் அகலும்.

**கடகம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், கல்வி வளர்ச்சிக்காக பணத்தை செலவு செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையடைய வேண்டிய நாள்.

**சிங்கம்** தாய் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், அஞ்சல் வழித்தகவல் நெஞ்சம் மகிழ வைக்கும், புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன யோகத்தால் வளம் காணும் நாள்.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பணத்தேவைக்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், உறவினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணப்புழக்கம் சுமாராக இருக்கும்.

**தனுசு** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், குல தெய்வ வழிபாட்டை நிறைவேற்றும் எண்ணம் மேலோங்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புத்தி சாதுரியத்தால் காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்பால் ஏற்றமடைவீர்கள், தனவரவு திருப்தி தரும், மங்கலச் செய்தி வந்து சேரும்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், அதிக பிரயாசையில் ஈடுபடுவீர்கள், தேகாரோக்கியம் சீராகும்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும், விருப்பங்கள் நிறைவேற இறைவனை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

# இராமாவில் நலன்புரி நிலையத்துக்கு அருகாமையில் குண்டொன்று மீட்பு

(பொற்பதி)

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் இன்னும் மீள் குடியேற்றம் செய்யப்படாமலுள்ள மக்கள் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது வீடுகள்யாவும் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அம் மக்கள் அருகில் உள்ள பகுதியில் மணலை வெட்டி வெள்ளம் உள்ள இடத்திற்கு மண்ணை நிரப்பும் வேலையில் ஈடு பட்டனர். இதன் போது மண் வெட் டப்பட்ட இடத்தில் வெடிகுண்டு ஒன்று இருப்பதைக் கண்டனர்.

இதனையடுத்து தமது வேலையை இடை நடுவில் நிறுத்திவிட்டு அப்பகுதி இராணுவத்தின ருக்கும் பொலி சாருக்கும் தகவல் கொடுத்தனர். இதை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த இராணுவத்தி னரும் பொலிசாரும் குண்டு உள்ள இடத்தை அபாயப் பிரதேசமாக அறிவித்துள்ளனர்.

அதைத்தொடர்ந்து அக்குண்டை அகற்றுவதற்குரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-64)

# தேசிய அடையாள அட்டைத் தரவுகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன


தேசியஅடையாள அட்டைத்தரவுகள் கணினி மயப்படுத்தப்பட உள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல தேசிய அடையாள அட்டை உரிமையாளர் களினதும் தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட உள்ளதாகவும் இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் சகல மாணவர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் சகல பிரஜைகளுக்கும் கணினி மயப்படுத்தப்பட்ட நவீன தேசிய அடையாள அட்டைகள் விரைவில் விநியோகம் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 90 | 80 |
| தக்காளி | 100 | 110 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 180 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 160 | 100 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 180 |
| போஞ்சி | 150 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 40 |



காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை கலாசாரப் பேரவையின் கலாசாரவிழா அண்மையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது. காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்கள் மலர்மாலையிட்டு அரங்கிற்கு அழைத்துவரப்படுவதனையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதனையும் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையுரையாற்றுவதனையும் சிறப்பு விருந்தினர்களான மத்தியவங்கியின் வடமாகாண முகாமையாளர் இ.சிறிதரன், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம் ஆகியோர் சிறப்புரையாற்றுவதனையும் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற தலைவர் ந.சோதிநாதன் கலைச்சேவைக்கு ஆற்றிய பணியைக் கௌரவித்து "கலைச்சுடர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிப்பதனையும் நடைபெற்ற கலைநிகழ்வில் ஒன்றினையும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## மூக்குக் கண்ணாடி வழங்கல்

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு கலையரசி சன சமூக நிலையத்தில் கடந்த 3 ஆம் திகதி அன்று காலை 10 மணியளவில் தி.யோகச் சந்திரா தலைமையில் நெத்சிசில எனும் அமைப்பினால் இலவசமாக கண் பரிசோதனை நடாத்தி குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

இதில் தொண்டைமானாற்று மக்களும் அயல் கிராம மக்களும் கலந்து பயன் அடைந்தனர். (எ-52)

## மீள்குடியேறிய மக்களுக்கு சோஆ நிறுவனத்தினால் உதவி

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டத்தில் மீள் குடியேறிய மக்களுக்கு சோஆ நிறுவனத்தினால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இம் மக்களுக்கு 26 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் மேலும் பலருக்கு வீடுகள் கட்டுவதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வீட்டுத் திட்ட உதவிகளைப் பெற்ற பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-51)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தினால் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு " நானோ தொழில்நுட்பம்" குறித்த கருத்தரங்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜே கிலவாசன் நடத்தவுள்ளார்.

இது தொடர்பாக யாழ்.நகரை அண்மித்த கல்லூரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. கடிதம் கிடைத்த கல்லூரிகள் அறிவித்தலுக்கு அமைய சமுகம் தருமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கலட்டி, கோலனி கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி பாதிப்பு

(கரவெட்டி)

கலட்டி, கோலனி கிராமங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. அல்வாய் ஜே/ 380 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள இக்கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு இரண்டு பொதுக்கிணறுகள் மட்டுமே உள்ளதுடன் மலசல கூட வசதிகள் இன்மையால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இக்கிராமத்தில் சிறு குடிசைகளில் மூன்றிற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் அவல நிலையும் காணப்படுகிறது.

இவர்களின் கல்வித் தரம், விளையாட்டுத் துறை, சமய சமூக நிகழ்வுகள் போன்றவை மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இம்மக்களின் பிரச்சினைக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)




## மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு கோரிக்கை

மணியந்தோட்டம் முதலாம், இரண்டாம் குறுக்குவீதிகள் மக்கள் போக்குவரத்துக்கு இதுவரை அனுமதியளிக்கப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்-களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் மீளக்குடியமர அனுமதிப்பதாக இராணுவத்தினர் கூறியதாகவும் தற்போது மிதிவெடிகள் அகற்றப்பட்டும் தம்மை மீளக் குடியமர்த்தவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-51)

## கல்வியால் முன்னேறும் சமூகமே போற்றுதலுக்குரிய சமூகமாகும்

### யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவடைந்து ஜனநாயகம் நிலைநாட்டப்பட்ட சூழ்நிலையில் நாம் வாழ்ந்து வருகின்றோம். தென் பகுதி மக்கள் எவ்வாறு ஜனநாயக ரீதியாக உரிமைகளைப் பெற்றுக் கொள்கின்றனரோ அதே வகையில் எமது வடபகுதி மக்களும் உரிமைகளைப் பெற்று வாழும் சூழ்நிலை தற்போது எமக்கு ஏற்பட்டுள்ளது என யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி மன்றின் மூலம் வசதி குறைந்த சிறார்களுக்கான கல்விப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களுக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல. அதேவேளையில் இவர்கள் மன உறுதியோடு கல்வியால் முன்னேற வேண்டும். கல்வியால் முன்னேறும் சமூகமே போற்றுதற்குரிய சமூக மாகக் கருதப்படும். நீங்கள் அனைவரும் பொறியியலாளர்களாகவோ அல்லது வைத்தியர்களாகவோ வாழ்க்கையில் முன்னேற ஆசைப்பட வேண்டும்.

உங்கள் முன்னேற்றத்திற்கு தக்க சூழல் தற்போது அகைமக்கப்பட்டுள்ளது. உங்கள் எதிர்கால முன்னேற்றம் கருதி வாழ்வில் சிந்தியுங்கள்.

வாழ்வாதாரம் குறைந்த நிலையில் வாழும் உங்களுக்காக சமுர்த்தி மகாசங்கத்தால் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. இதை நீங்கள் தகுந்த முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் தான் தென்பகுதியில் நடைமுறையில் இருந்து வந்த சமுர்த்தி பயன்பாடு வடபகுதி மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

அவருக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர்

## மின் விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கியுள்ள பஸ் நிலையம்

### பயணிகள் பெரும் சிரமம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ்நிலையம் மின் விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இதனால் இவ் பஸ் நிலையத்தில் இருந்து பயணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.


கடந்த 1990 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் இவ் பஸ் நிலையமானது மின் விளக்குகள் பொருத்தப்பட்டு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே தற்போது போக்குவரத்துக்கள் அதிகரிக்கப்பட்டு வரும் நிலையில் பயணிகள் அதிகாலை, இரவு வேளைகளில் வெளிச்சமின்றி பயணம் செய்ய முடியாமல் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார் கள்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் மக்கள் நலனில் அக்கறை எடுத்து பஸ் நிலையத்தை ஒளியூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-70)








நல்லூர் பிரதேச செயலக கட்டட திறப்புவிழா நேற்று நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தேசிய கொடியினை ஏற்றிவைப்பதையும் கட்டடத்தை திறந்துவைப்பதையும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கட்டடப் பொறியியலாளர் ஆர். குகநேசன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் ஊருணி நூலின் முதற்பிரதியை அமைச்சரிடமிருந்து யாழ்.அரச அதிபர் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# வெலிக்கடை சிறையில் பொலிஸார் மீது தாக்குதல்

## 50 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகளினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 50 பொலிஸார் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறைச்சாலையில் தேடுதல் நடவடிக்கையொன்றில் ஈடுபட்ட பொலிசார் மீதே மேற்படி கைதிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறைக்கூடங்களில் போதைப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்குள்ள சிறைக் கூடங்களிலிருந்து சுமார் 4 ஆயிரம் கைதிகள் வெளியேற்றப்பட்ட நிலையிலேயே இந்த சோதனை நடவடிக்கை நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த சிறைக் கைதிகளினால் சுமார் 500 சிறைச்சாலை அதிகாரிகள் வரையில் தாக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 50 பேர் வரையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தற்போது இந்த மோதல் நிலைமை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ-2)

# ஐ.தே.க.உறுப்பினர்களுக்கிடையில் தொடரும் கருத்து முரண்பாடுகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித்பிரேமதாசவிற்கும் ரவி கருணாநாயக்கவிற்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்கள் தனித்து இயங்குவதற்கு ஆரம்பித்துள்ளதாகவும் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக போராட்டங்களை நடத்துவதற்கு சஜித் தரப்பினர் ஆயத்தமாகி வருவதாக கட்சி வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக ஊடகவியலாளர் சந்திப்புக்களில் விமர்சனங்கள் வெளியிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் சிலைக்கு அருகாமையிலும் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவிற்கு அருகாமையிலும் சஜித்தரப்பினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளதாகவும் ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு எதிரிலும் போராட்டம் நடத்தப்பட உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு தரப்பினருக்கும் இடையில் மறைமுகமாக நிலவிய கருத்து முரண்பாடு தற்போது விஷ்வரூபம் எடுத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# சஜித் பிரேமதாஸவுக்கு எதிராக களமிறங்கும் மங்கள சமரவீர



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துவரும் கிராம உலா திட்டத்தின் தலைமைப் பொறுப்பை பிரதித் தலைவர் கருஜெயசூரியவிடம் இருந்து அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இறுதியாக கடந்தவாரம் மாத்தறையில் இடம்பெற்ற கிராம உலாவில் கருஜெயசூரியவும் மங்கள சமரவீரவும் பங்கேற்றனர்.

இந்த நிலையில் கட்சியின் மறுபுறத்தில் கிராம உலா பிரசாரத்தை மேற்கொண்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கு மங்கள சமரவீரவே சிறந்த போட்டியாக இருப்பார் என கட்சியின் பெரும்பாலானோர் நினைக்கின்றனர்.

விரைவில் சஜித் பிரேமதாஸ கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கட்சி உறுப்பினர்களை தெளிவாக்கும் பொருட்டு தனியாக அனுராதபுரத்திற்கு செல்லவுள்ளார்.

எனவே மங்கள சமரவீர கட்சியின் கிராம உலாவுக்கு தலைமை தாங்க வேண்டும் என அவர்கள் எண்ணம் கொண்டுள்ளனர்.

எனினும் சிலர் மங்கள சமர வீரவின் நடவடிக்கைகளுக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் அரசாங்கத்தின் அனுசரணையில் அமெரிக்காவுக்கு சென்று வந்த கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவிடம் எவ்வித விளக்கத்தையும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)


union assurance
Trust in your tomorrow, today.

## வேலை வாய்ப்பு

இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கான வேலை வாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட பிராந்திய கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

### பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 4
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 2
காப்புறுதி ஆலோசகர் → பதவி - 1

அடிப்படைத் தகைமைகள் :-
* க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
* காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
* விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்
* தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
* வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் .
* உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
* உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
* திடசித்தம்

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- புதன்கிழமை -10.11.2010
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :- காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
A.Rajeevan
K.R.Jegan
0779116282 , 0773670322

(சி-1563)

# வடக்கு மாகாண பாடசாலைமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

*(6 ஆம் திகிதி தொடர்ச்சி ....)*

**கட்டுரை வரைதல்**

**தரம்–5**

ஆர்.சிவந்தனா(மன்/சித்தி விநாயகர் இந்து கல்லூரி), பி.காரூண்யா (யாழ்.சென் ஜோன் பொஸ்கோ வித்தி), வி.வரகி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**தரம் – 6**

பி.அமன்டா நெஸ்ரீன் (யாழ்ப்பாண கல்லூரி), ஜெ.செனோவா (யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஏ.மாதுகி (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

**தரம் – 7**

'ஆர்.அன்ரீயா சாந்தனா (யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பி.சௌமியா (யாழ்/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.விசாகி (வவு/தமிழ் ம. மகா வித்தி)

**தரம் – 8**

ரி.சரோன் திவ்வியா (யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எம்.துவிஜனன் (வவு/தமிழ் ம. மகா வித்தி), ரி.லக்மி (யாழ்/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**தரம் – 9**

வை.ஹர்ஷிகா (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி), கே.ரவிகரன் (யாழ்/சென் ஜோன்ஸ் கல்லூரி), ஏ.நிக்கலின் ஸ்ரான்ஷா (யாழ்/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)

**தரம் – 10**

பி.பிரேசி ஹன்னா (யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.ரூசனா (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி), ஏ.அஸ்வினி (மன்/சித்திவிநாயகர் இந்து கல்லூரி)

**தரம் – 11**

சனுபாரா சஜீடின் (வவு/சைவபிரகாச மகளிர் கல்லூரி), ரி.ஆன் கனிமொழி (மன்/நானாட்டான் மகா வித்தி), ஜெ.ஜோவெல் ஜீவநேசன் (யாழ்/சென் பற்றிக்ஸ் கல்லூரி)

**தரம் – 12**

பி.றெஜினோல்ட் தேவகரன் (யாழ்/சென். பற்றிக்ஸ் கல்லூரி), வை.ஹம் சானற்லி (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி, எச்.சொலமன் ராஜராம் (யாழ்/சென் ஜோன்ஸ் கல்லூரி), ரி.கௌதமி (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி)

**தரம் – 13**

பி.நந்திகரன் (யாழ்/இந்துக் கல்லூரி), எஸ்.ஜனனி (வவு/தமிழ் ம.மகா வித்தி), பி.லவின்சன் (வவு/தமிழ் ம.மகா வித்தி

**ஆங்கில பேச்சு**

**தரம் – 12**

எஸ்.சாம்பவி (யாழ்/உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.வினோஜகன் (வவு/விபுலானந்த கல்லூரி), ரி.பேடினன்ட் ஸ்சைலோ (யாழ்/சென் ஜோன்ஸ் கல்லூரி)

**தரம் – 13**

ர.விஜயகுமார் பெனிசஸ் துஷான் (யாழ்/சென் பற்றிக்ஸ் கல்லூரி), பி.நந்திகரன் (யாழ்/ இந்துக் கல்லூரி), எஸ்.கௌதமன் (வவு/தமிழ் ம.மகா வித்தி), எஸ்.துளசினி (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி

**உரையாடல் நாடகம்**

**ஆரம்பப்பிரிவு (தரம் 3 தொடக்கம் 5)**

யாழ் உடுவில் மகளிர் கல்லூரி, இரு பாடசாலைகள் இரண்டாம் இடம் மன்/புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி, வவு/விபுலானந்த கல்லூரி

**கனிஷ்டப்பிரிவு (தரம் 6 தொடக்கம் 9)**

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி, இரு பாடசாலைகள் இரண்டாம்இடம் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி

**சிரேஷ்டப் பிரிவு தரம் (10 தொடக்கம்13)**

யாழ்/ வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி, முல்/ யோகபுரம் மகா வித்தி

**இலக்கிய நாடகம்**

**சிரேஷ்டப் பிரிவு (தரம் 10 தொடக்கம் 13)**

யாழ்/உடுவில் மகளிர் கல்லூரி, மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி

**ஆங்கில நாடகம்**

**தரம் – 6**

வவு/வவுனியா தமிழ் மகா வித்தி, யாழ்/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, மன்/வட்டக் கண்டல் றோ.க.த.க பாடசாலை.

**தரம் – 7**

யாழ்ப்பாணக்கல்லூரி, வவு/ சைவபிரகாச மகளிர் கல்லூரி

**தரம் – 8**

யாழ்/ வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலை, வவு/சைவபிரகாச மகளிர் கல்லூரி, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

**தரம் – 9**

யாழ்/ வட இந்து மகளிர் கல் லூரி, வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரி

**தரம் – 10**

யாழ்/வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலை, வவு/சைவபிரகாச மகளிர் கல்லூரி

**தரம் – 11**

வவு/வவுனியா தமிழ் மகா வித்தி, யாழ்/சென் பற்றிக்ஸ் கல்லூரி

**கிராமிய நடனம்**

**தரம் – 10**

எஸ்.லக்சனா (யாழ்/ வயாவிளான் ம.மகா வித்தி), ஜி.சரோன் வான்மதி (யாழ்/ வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), சி.மரியன் சாலினி (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி)

**தரம் – 11**

வி.விஜிதா (யாழ்/ இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி, ஐ.லேனுகா (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), எஸ்.திவாகரன் (யாழ்/ ஹாட்லி கல்லூரி)

**தரம் – 12**

எஸ்.கிஷோர் (யாழ்ப்பாணக் கல்லூரி), பி.றெஜினோல்ட் திவாகரன் (யாழ்/ பற்றிக்ஸ் கல்லூரி), வை.கிரேசியன் ஜெனில் (மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)

**தரம் – 13**

எஸ்.கௌசிகா (யாழ்/ விக்ரோறியா கல்லூரி), பி.சரணியாதேவி (யாழ்/ கொக்குவில் இந்துகல்லூரி), பி.பால்ராஜ் (மன்/பரிகாரைக் கண்டல் அ.த.க பாடசாலை)

**உரத்து வாசித்தல்**

**தரம் – 3**

கே.தர்சிகா (வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி), பி.அஞ்சலிக்கா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி), என்.தாமிக்கா (யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி)

**தரம் – 4**

ஜெ.ஆனதில் சாணுகா (யாழ்/ சென் ஜோன் பொஸ்கோ வித்தி), இரண்டாம் இருவர் ஆர். கிருஷிகா (மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), ரி. ஜெயடான்சி தாசியஸ் (யாழ்/ இந்து ஆரம்பப் பாட சாலை)

**தரம் – 5**

ஜெ.ஜெகதீபிகா (யாழ்/ சென்ஜோண் பொஸ்கோ வித்தி), எம்.சங்கவி (வவு/ சைவ பிரகாச மகளிர் கல்லூரி), ஜி.பிறையொளி (யாழ்/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**அபிநயப் பாடல்**

**ஆரம்பப் பாடசாலை(1 தொடக்கம் 2)**

உடுவில் மகளிர் கல்லூரி, மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி,

**ஆரம்பப் பாடசாலை (3 தொடக்கம் 5)**

யாழ்பபாணக் கல்லூரி, வவு/ இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி, மன்/சென் மேர்ஸ் மகளிர் கல்லூரி

**குழுப்பாடல்**

**கனிஷ்ட பிரிவு (6 தொடக்கம் 9)**

மன்/ புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி, வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி

**சிரேஷ்ட பிரிவு (10 தொடக்கம் 13)**

யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி, மன்/சென் ஆன் மத்திய மகா வித்தி, வவு.தரணிக் குளம் கணேசா வித்தி

**திறந்த நாடகம்**

**தரம் 3 தொடக்கம் 13 வரை**

யாழ்.ஹாட்லிக் கல்லூரி, வவு/ இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம், கிளி/ வ ட்டக்கச்சி மகா வித்தி. (முற்றும்)

## யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் உளவியல் தாக்கங்களால் அவதி!

யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் தற்கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான வடக்கு மக்கள் மன அழுத்தங்களையும் உளவியல் பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான அழுத்தங்கள் , மன உளைச்சல் , உளவியல் தாக்கங்கள் உள்ளட்ட பல்வேறு உளவியல் பிரச்சினைகளினால் யுத்த வலய மக்கள் தொடர்ந்தும் அல்லலுறுவதாக வன்னி மனநல ஆலோசகர் டாக்டர் தயாழினி தியாகராஜா தெரிவித்துள்ளார்.

மன உளைச்சலின் காரணமாக அதிகளவானோர் தற்கொலை முயற்சியில் இறங்குவதாகவும் குறிப்பாக அதிகளவான பெண்களே தற்கொலை செய்து கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

நாள்தோறும் சராசரியாக நான்கு பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வருவதாக கிளிநொச்சி வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உளவியல் நோய்களினால் பாதிக்கப்பட்ட 500 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் இத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பெற்றுக் கொள்வதில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

வன்னி உள்ளிட்ட யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் போதியளவு மனநல மருந்துவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை எனவும் இதனால் சிகிச்சை அளிப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.யுத்தம் காரணமாக ஏற்பட்ட உளவியல் தாக்கம் முழுமையாக களைவதற்கு இன்னும் ஒன்றிரண்டு தலைமுறைகள் தேவைப் படலாம் என டாக்டர் தயாழினி தெரிவித் துள்ளார். (ஸ்ரீ–2)

## ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு இலட்சம் பேருக்கு இலவச காணிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் 65 ஆவது பிறந்த தினம் மற்றும் அவர் ஜனாதிபதியாக இரண்டாம் தரம் பதவி ஏற்கின்ற வைபவம் ஆகியவற்றை முன்னிட்டு காணி இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி எதிர்வரும் 18 ஆம் திகதி 65 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றார். அத்துடன் அவர் இம்மாதம் இரண்டாவது பதவிக் காலத்தை பொறுப்பு ஏற்கிறார். காணி இல்லாதவர்கள் என மாவட்ட செயலகங்களில் ஏற்கனவே பெயர்களைப் பதிவு செய்து இருக்கின்றவர்களுக்கு இவற்றை முன்னிட்டு காணிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சுமார் ஒரு இலட்சம் பேர் வரை இத்திட்டத்தால் பயன் அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான அறிவுறுத்தல்களை காணி ஆணையாளர் ஆர்.பி. ஆர். ராஜபக்ஷ மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கியுள்ளார். (ஸ்ரீ–2)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் கந்தசஷ்டியை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு "கலியுகத்தில் கந்தன்" எனும் தலைப்பில் மதுர கவி காரை எம்.பி. அருளானந்தம் மற்றும் மறுநாள் புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு "வேலின் மகிமை" எனும் தலைப்பில் ஆசிரியர் கே. கைலைநாதன் ஆகியோர் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ–2)

## புலம் பெயர் தமிழர்களில் இரு பிரிவினர் உள்ளனர்

### இலங்கைக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வரும் தமிழர்களின் தன்மையை இனங்காண்பது சர்வதேசத்தின் பொறுப்பாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதத்தை நோக்கமாக கொண்டவர்களும் புலம்பெயர்ந்தவர்களில் உள்ளனர். அதேபோல இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அபிவிருத்தி தொடர்பாக சிந்திக்கும் தரப்பினரும் சர்வதேச ரீதியாக இருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் இலங்கை தமது நம்பகத் தோற்றத்தை சர்வதேச ரீதியாக மேம்படுத்திக் கொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விடயத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பல சமாதான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததன் காரணமாத யுத்தத்தின் மூலமாகவும் பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும் என உண்மையை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டதாக ஆரியசிங்க குறிப்பிட்டார்.

(ஸ்ரீ–2)

# நீரிழிவு, இதய நோயாளர்களுக்கு உகந்த.குடாநாட்டு.உணவுகள் 01

**"கிளைசீமிக்" சுட்டிப் பெறுமானங்கள் குறித்த ஆய்வுதரும் பல பயனுறு தகவல்களும் தரவுகளும்**

இந்த ஆய்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த 27 ஆம் அணி மாணவன் செல்லத்துரை பிரசாத், உயிர் இரசாயனவியல் துறை ஆய்வு மாணவன் ப.ரகுபரன் ஆகியோரால் உயிர் இரசாயனவியல் துறை அலகின் (Department of Bio chemistry) கீழ் உயிர் இரசாயன வியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், உயிர் இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் Dr.ச. பாலகுமார் ஆகியோர்களின் வழிகாட்டலின் கீழ் மேற் கொள்ளப்பட்டதாகும். உயிர் இரசாயன வியல்துறை தொழில்நுட்ப அலுவலர் தயானந்தன் ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இவ் ஆய்வுக் கட்டுரையின் முடிவுகள் யாழ்ப்பாண, விஞ்ஞான சங்கத் தலைவர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தால் வருடாந்த விஞ்ஞான சங்க மாநாட்டில் கடந்த வருடம் முதன் முதலாக வெளியிடப்பட்டன. இவ் ஆய்வானது யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத் துறையினால் வருடந்தோறும் வழங்கப்படும் சிறந்த ஆய்வுக்கான ஞாபகார்த்தப் பரிசினையும் பெற்றுக்கொண்டது. இக்கட்டுரை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடை பெற்ற சர்வதேச மருத்துவ மாணவர்களின் விஞ்ஞான மாநாட்டிலும் சிறந்த ஆய்வு களுள் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற மட்டக்களப்பு மருத்துவ சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் சிறந்த ஆய்வுக்கான விருதினைப் பெற்றுக் கொண்டது. கொழும்பில் நடைபெற்ற இலங்கை மருத்துவ நிபுணர்கள் கல்லூரியின் (Ceylon College of Physicians) வருடாந்த உயர்மாநாட்டிலும் சிறந்த ஆய்வுகளுள் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது. இலங்கை மருத்துவ சங்கத்தினால் (Sri Lanka Medical Association) வெளியிடப்படும் இலங்கை மருத்துவ சஞ்சிகையின் (Ceylon Medical Journal) பத்திராதிபர் பீடத்தினால் உயர்தர (Merit) சிறந்த ஆய்வுக்

## யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஆய்வின் முடிவு

கட்டுரையாகத் தெரிவு செய்யப்பட்டது.

நாம் காபோவைதரேற்று அடங்கியுள்ள உணவுப் பொருட்களை உட்கொள்ளும்போது குருதியில் ஏற்படும் குளுக்கோசு அதிகரிப்பினை நியம உணவுடன் ஒப்பிட்டுக் கணிப்பிடும் ஓர் (பண்பு ரீதியான) அளவுச்சுட்டியே கிளைமீசிக் சுட்டி (Glycaemic index-GI) என வரையறுக்கப்படுகின்றது. நியம உணவுப் பொருளாக (Standard food) தற்போது தூய குளுக்கோசு (100% Glucose) பயன்படுத்தப்படுகின்றது. இச் சுட்டியானது முதன் முதலாக 1981 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ரொறான்றோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த (University of Toranto) Dr.David மற்றும் Dr.J.Jenkins ஆகிய ஆய்வாளர்களால் ஆய்வு ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பதமாகும். உலக விவசாய நிறுவனம், உலக சுகாதார ஸ்தாபனம் (FAO/WHO,1997) வரை யறைப்படி GI குருதியின் குளுக்கோசு அதிகரிப்பு வீதச் சுட்டி எனக் கொள்ளப்படு கின்றது.

இவ் உணவுச் சுட்டியின் பெறுமான அடிப்படையில் உணவுப் பொருட்கள் உயர்வான, நடுத்தரமான, குறைவான GI உடைய உணவுப் பொருட்களாக வகைப்படுத்தப் படுகின்றன. GI பெறுமானம் 70 இற்கும் மேற்பட்ட உணவுப் பொருட்கள் உயர்ந்த GI உடையனவாகவும், 55 இற்கும் 65 இற்கும் இடைப்பட்ட உணவுப் பொருட்கள் நடுத்தர மானGI உடையனவாகவும் 55 இற்கு குறைவான உணவுப் பொருட்கள் குறைவான GI உடையனவாகவும் வகைப்படுத் தப்படுகின்றன.

GI உயர்ந்த மற்றும் குறைந்த உணவுப் பொருட்கள் பல்வேறுபட்ட வகையில் பல தரப்பட்ட நோயாளர்களுக்கு பயனுடையனவாக அமைகின்றன. உதாரணமாக GI குறைவான உணவுப் பொருட்கள் உடலின் குளுக்கோசு மட்ட அதிகரிப்பு வீதத்தைக் குறைப்பதன் மூலம் நீரிழிவு (Diabatic mellitus) உடையவர்களுக்கும், குருதியின் கொழுப்பு (Cholestrol) அதிகரிப்பு வீதத்தை குறைப்பதன் மூலம் இருதய நோய் (Coronary Heart Discasc) உடையவர்களுக்கும், உடலின் நிறையைக் குறைப்பதன் மூலம் அதிக உடற்பருமன் (Obesity) உடையவர்களுக்கும் பயனுள்ளதாக அமைகின்றன. உயர்ந்த GI பெறுமானம் உடைய கதலி, கப்பல், இதரை என வாழைப்பழங்கள் தாள் கிளைசீமிக் சுட்டியுடைய பழ வகைகளாகும். இவற்றுள் இதரை வாழைப் பழமானது குறைந்த கிளைசீமிக் சுட்டியைக் கொண்டது(55). ஏனைய பழங்களில் பப்பாசிப்பழமானது மிகவும் குறைந்த கிளைசீமிக் சுட்டியுடைய பழமாகும். பலாப் பழமானது நடுத்தர கிளைசீமிக் சுட்டியுடைய பழமாகும்.

**செல்லத்துரை பிரசாத்**
**27ஆம் அணி,**
**மருத்துவபீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

எனவே இவற்றுள் பப்பாசிப்பழம், இதரை இன வாழைப்பழம் என்பன நீரிழிவு,இருதய நோய் உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.

(தொடரும்)

## வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(மாதகல்)

மாதகல் பகுதியில் உள்ள விளான்-மாதகல் கிராமத்தை இணைக்கும் வீதியானது நீண்டகாலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ் வீதியில் மழை நீர் தேங்கி நிற்பதால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். அத்தோடு வாகன விபத்துக்களும் அடிக்கடி இடம்பெறுகின்றன.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து இவ்வீதியைத் திருத்தித் தருமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-47)

## வடமாகாணத்தில் இவ்வருடம் 14,166 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

### இந்திய கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது கண்ணிவெடி வரிசைகள் கண்டறியப்பட்டுள்ளன எனவும் இவை விவசாய நிலங்களில் விதைகள்விதைக்கப்பட்டிருப்பது போல் காட்சியளிக்கின்றன எனவும் இந்திய கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான சர்வத்ரா தெரிவித்துள்ளது.

இந்தக் கண்ணிவெடி வரிசைகள் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இப்படியான சில வரிசைகள் 100 மீற்றர் தூரமும் வேறு சில ஒரு கிலோ மீற்றர் தூரமும் கொண்டவையாக காணப்படுகிறது.

இவைகள் ஆழமாகப் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவத்துள்ள கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பிரதான பரிபாலன அதிகாரி மந்திர் சிங் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் இவ்வருடத்தில் மாத்திரம் 14 ஆயிரத்து 166 கண்ணிவெடிகள் கண்டுபிடித்து அகற்றப்பட்டுள்ளன. பெரும்பாலும் இவைகள் எல்.ரீ.ரீ.யினால் தயாரிக்கப்பட்ட 99 ரங்கன் வகையைச் சேர்ந்தவையாகும்.

இவைகளுடன் விருத்தி செய்யப்பட்ட டெட்டனேட்டர் போன்ற வெடிக்கக்கூடிய பொருட்களும் இணைக்கப்பட்டுள்ளன. எம்முடைய செயற்பாட்டு முன்னேற்றம் சம்பந்தமான அறிக்கை நாளாந்தம் இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்படுகிறது என்றார்.

இவர்கள் சர்வத்ரா அர்ஜுன் என்னும் ஓர் இயந்திரத்தை இக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. கைகளினால் அகற்றுவது காலவிரயமும் ஆபத்தும் ஆகுமெனக் குறிப்பிடப்படுகிறது.

காட்டுப்பகுதிகளிலும் புதர்ப் பிரதேசங்களிலும் கண்ணிவெடிகளை அகற்றுவது மிகவும் சிரமமான காரியம் எனத் தெரிய வருவதுடன் குண்டு தாக்காத மேற் குறிப்பிட்ட இயந்திரத்தால் அகழ்ந்தெடுப்பது எளிதாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

சர்வத்ரா நிறுவனம் கடந்த 2003 முதல் இலங்கையில் இயங்கிவருகின்றது. நோர்வே தூதரகம் இதற்கு நிதியுதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)



"மகாஜனன் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் யா/மகாஜனாக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மயிலங்கூடலூர் பி.நடராசன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## பூநகரி - சங்குப்பிட்டிப்பாதை இவ் வருட இறுதிக்குள் திறப்பு

கிளிநொச்சி பூநகரி -சங்குப்பிட்டி இறங்கு துறை மற்றும் யாழ்ப்பாண குடா நாட்டை இணைக்கும் பால நிர்மாணத்தின் 95 வீதப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் நிதி உதவியுடன் அமைக்கப் பட்டுவரும் 188 மீற்றர் நீளமான இந்தப் பாலம் போக்குவரத்துக்காக இந்த வருட இறுதியில் திறந்து வைக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து தற்போது கொழும்பில் இருந்து ஆனையிறவு ஊடான யாழ்ப்பாண குடாநாட்டிற்குச் செல்லும் பாதையை விட சங்குப்பிட்டியின் ஊடான பாதை குறைந்த தூரப் பாதையாக அமையும் எனக் குறிப்பிடப் படுகிறது. (ஸ்ரீ-2)

# கிராமங்களை நோக்கிய ஆங்கில மொழிக் கல்வி

01

**கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வ.பரந்தாமன் ஆற்றிய நினைவுப் பேருரை இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)**

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற நூற்றாண்டு விழாவிற்கு நினைவுப் பேருரையை வழங்குவதில் பேருவகை அடைவதுடன், இப் பாடசாலைச் சமூகத்தின் அளப்பரிய சேவைகளையும், இப்பாடசாலையை ஸ்தாபித்த தன் உன்னத நோக்கத்தினை நிறைவேற்றுவதில் முன்னின்று உழைக்கின்ற பாடசாலைச் சமூகத்தினரையும் மனதார வாழ்த்தி எனது கன்னி நினைவுப் பேருரையை இங்கு குழுமியிருக்கும் அறிஞர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்வியியலாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மத்தியில் நிகழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.

எமது மாணவச் செல்வங்களின் கல்விப்புல, மொழிப்புல விருத்திக்கு பல்வேறுபட்ட நிறுவனங்கள் தமது செழுமையான வளங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் ஒத்துழைப்பு நல்குகின்றன. அந்த வகையில், இம் மகா வித்தியாலயத்தின் அளப்பரிய சேவையானது கைதடி கிராம மக்களின் கல்வி, சமய, பண் பாட்டு, ஒழுக்கநெறி முறைகளை விருத்தி செய்வதிலும், மாணவர்கள் மத்தியில் இந் நெறிமுறைகளை பதியச் செய்வதிலும் முக்கிய பங்காற்றுகின்றது, பங்காற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பில் உள்ளன.

உலகமயமாதலின் அதிவேக வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் எமது இளம் மாணவர்கள் பல்வேறு மட்டங்களில் தயார்ப்பத்தப்பட வேண்டும். ஏனெனில் எமது மாணவர்கள் தமது கல்விப்புல விருத்தியை சர்வதேச மட்டங்களிற்கு எடுத்துச்செல்வதில் மிக்க ஆர்வமுடையவர்களாக உள்ளனர். மாணவர்களது ஆர்வத்தை நிவர்த்தி செய்வதில் கல்லூரிகள் முக்கிய பங்காற்றுகின்றன.

ஆங்கில மொழித் தேர்ச்சியும், தகவல் தொழில்நுட்ப அறிவும் உலகமயமாதலின் இரு கண்களாகக் கருதப்படுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் இந் நினைவுப் பேருரைக்கு நான் எடுத்துக்கொள்கின்ற விடயம் கிராமத்து மாணவர்களின் ஆங்கிலமொழித் தேர்ச்சியை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்ற கருவை அடிப்படையாகக் கொண்டது.

ஆங்கில மொழித்தேர்ச்சி என்பது தனியே நகரத்துப் பாடசாலைகளுக்கும், அங்கு கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உரித்தான சொத்தல்ல. இத்தேர்ச்சியானது தேசிய மட்டத்தில் சகல கிராமங்களிற்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டிய ஒன்றாகும். தற்போதைய அரசாங்கத்தின் "வாழ்க்கைக்கான ஆங்கில மொழிக் கல்வி" என்ற மாபெரும் திட்டமானது, கிராமத்துப் பாடசாலைகளில் ஆங்கில மொழித்தேர்ச்சியை எவ்வாறு குறிப் பிட்ட அடைவு மட்டங்களிற்கு எடுத்துச் செல் லலாம் என்ற கோட்பாட்டை அடிப்படை யாகக் கொண்டது. மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் ஆலோசகரான கலாநிதி சுனிமல் பெனாண்டோ அவர்களது சமூக , மானுடவியல் ஆய்வுகளிற்குட்பட்ட இக் கோட்பாடானது தற்சமயம் பல்வேறு மட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### முதல் மொழியும் இரண்டாம் மொழியும்

கடந்த இரு தசாப்தங்களாக, எமது கல்வித் துறைக்கான நிர்வாகத்தினரும், திட்டமிடலாளர்களும் கல்விக்கான ஊடக மொழி பற்றிய தெளிவான சிந்தனையை வழங் குவதில் பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர் கொண்டுள்ளனர். நவீன சமூக மொழியியல் கோட்பாடுகள் முதலாம், இரண்டாம் மொழி கள் பற்றிய தெளிவுத்தன்மையை துல்லியமாக எடுத்தியம்புகின்றன. முதல் மொழியானது எமது தாய்மொழி, தேசிய, சுதேசமொழி. எமது வாழ்வு, வாழ்விற்கான கட்ட மைப்புக்கள், சமூகப் பண்பியல் நெறிமுறை கள், சமய ஒழுக்க விதிமுறைகள், கலாசார பண்புகள் யாவும் எமது தாய்மொழியால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன.

நான் யார்? என்ற வினாவிற்கு உடனடியான முதல்விடை எமது தாய் மொழியிலேய தங்கியுள்ளது. யாழ்ப்பாணம் போன்ற மிகவும் இறுக்கமான மொழிக்குழுமம் (Speech Community) அதன் தாய் மொழி மூலமான நடைமுறைகளை இலகு வாக வும், ஒழுங்காகவும் நெறிப்படுத்து கின்றது.

"கல்விக்கான மொழி" என்ற கோட்பாடும் முதல் மொழிக்குள்ளேயே அடக்கப்படுகின்றது. இறுக்கமாகப் பின்னப்பட்ட மொழிக்குழுத்தில் அங்கத்தவர்களாக இயங்கும் நாங்கள் எமது முதல்மொழி பற்றிய எண்ணக்கருவை மிகத் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். உதாரணமாக, கல்லூரிகளின் மகுட வாசகங்கள், வளைவிற்குரிய வாசகங்கள் , கல்லூரிக் கீதங்கள் முதல் மொழிமூலம் ஒன்றி ணைக்கப்பட வேண்டும். இரண்டாம் மொழிக்குரிய வரையறுக்கப்பட்ட பாவனைக் கட்டமைப்புக்கள் (domains) மிகத் தெளிவாக உள்ளன. உயர் கல்வி, வியாபாரம், விமானப் போக்குவரத்து, சுற்றுலாத்துறை, விளையாட்டுத் துறை, தகவல் தொழில் நுட்பத் துறை போன்ற சந்தர்ப்பங்கள் நாம் ஆங்கில மொழிப் பிரயோகத்தை ஊக்குவிக்கின்ற கட்டாயத்தில் உள்ளோம்.



மாணவர்கள் மத்தியில் முதல் மொழி மூலமான கல்வியை ஊக்குவிப்பதுடன், இயற்கையாக மற்றவர்களின் தூண்டலுக்குள்ளாகாத, இரண்டாம் மொழியூடாக கல்வியைத் தொடரும் மாணவர்களது கல்வித்

**திரு.வ.பரந்தாமன்**
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனா நிலையம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான கட்டமைப்புக்கூறுகளையும் வளம் படுத்துவதில் கல்வி நிர்வாகத்திற்குட்பட்டோர் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

### மாணவர்களின் ஆங்கில மொழித்தேர்ச்சி

யாழ்.மாவட்டத்தில், மாணவர்களின் ஆங்கில மொழித்தேர்ச்சி என்பது ஓர் கூட்டு முயற்சியூடாக எட்டப்படுகின்றது. நிறுவனம் மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் செயற்பாடுக ளினூடு ஆசிரியர்கள், மாணவர்கள், கற்றல், கற்பித்தலை நெறிப்படுத்தும் நிர்வாக அலகு கள் என பல்வேறுபட்ட மட்டங்களை உள்ளடக்கியதாக ஆங்கில மொழிக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அமைந்துள்ளன. (தொடரும்)



அவிவா என்.டி.பி. காப்புறுதி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 26ஆம் திகதி நிறுவனத்தில் இடம்பெற்ற வைபவத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் உப்புள் விஜயசிங்க, யாழ்.பிராந்திய முகாமையாளர் க.செல்வராஜன் ஆகியோர் இணைந்து கேக் வெட்டுவதையும் மாலை கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற வாடிக்கையாளர் ஒன்றுகூடலில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பணிப்பாளர் உரையாற்றுவதையும் படங்களில் காலணாம்.

## இலங்கையில் பணிப்பெண்களாக கடமையாற்றும் பிலிப்பைன்ஸ் பெண்கள்

இலங்கையில் இருந்து பல்லாயிரக் கணக்கான பெண்கள் பணிப்பெண்களாக கடமையாற்ற வெளிநாடுகளுக்கு செல்கின்றனர்.

இதில் பெரும்பாலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றனர். இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்கள் பலர் இலங்கையில் பணிப்பெண்களாக தொழில் செய்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிலிப்பைன்ஸில் உள்ள பெண்கள் இலங்கையில் 20 ஆயிரம் ரூபா சம்பளத்தின் அடிப்படையில் உயர்தர குடும்பங்களுக்கு பணிப்பெண்களாக சேர்த்துக் கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மொழி மற்றும் கல்வித் துறையில் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் கூடுதல் திறமைகளை கொண்டிருப்பதன் காரணமாக இலங்கை உட்பட ஏனைய நாட்டவர்களை விட அதிக ஊதியம் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மத்திய கிழக்கு நாடுகள் லெபனான் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் 81 சதவீதமான இலங்கை பணிப் பெண்களும் 39 சதவீதமான பிலிப்பைன்ஸ் பணிப்பெண்களும் பணியாற்றி வருவதாக சர்வதேச ஆய்வுகளின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீ

## சட்டத்தரணிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

சட்டத்தரணிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர்களை துணை பொலிஸ் அத்தியட்சகர்களாக நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வழக்குகளை விரைவில் முடிவுறுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலைகள், கொள்ளைகள், போராட்டங்களை மற்றும் விபத்துக்கள் போன்ற வழக்குகள் தொடர்பான விசாரணைகளை பிரதிக் பொலிஸ் மா அதிபர்களிடம் ஒப் படைப்பதற்கு சட்ட மா அதிபர் தீர்மானித் துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வழக்கு விசாரணைகளில் ஏற்படும் தேவையற்ற காலதாமத்தை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ



கோப்பாய் பிரதேச செயலர்பிரிவின்" சர்வதேச முதியோர் மற்றும் மாற்றுவலுவுள்ளோர்" தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அச்சுவேலி லயன்ஸ் கழகத்தலைவர் லயன் இ.கிருஷ்ணர் மங்கல விளக்கேற்றுவதையும் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பதில் பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி ஆகியோர் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மாற்றுவலுவுடைய ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இலங்கை அகதிகள் முகாமில் தீவிபத்து; 120 இற்கும் அதிகமான வீடுகள் தீக்கிரை

(சென்னை)

தமிழ்நாடு மொட்டமலை எனும் இடத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாமொன்றில் இடம்பெற்ற தீயினால் 120 இற்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையானதாக தமிழக பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட தீயினால் முகாமிலுள்ள அனைத்து வீடுகளும் முற்றாக அழிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் உயிரிழப்புகளோ காயங்களோ ஏற்பட்டதாக தகவல்கள் இல் லை. எனினும் சுமார் 2 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான உடைமைகள் அழிந்துள்ளன.

மின்னொழுக்கு காரணமாகவே இத்தீ பரவத் தொடங்கியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். முகாமுக்கு அருகிலுள்ள ராஜபாளையம் மற்றும் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய இடங்களிலிருந்து தீயணைப்பு வாகனங்கள் அழைக்கப்பட்டு சுமார் இரு மணித்தியாலங்களின்பின்னர் தீ அணைக்கப்பட்டது.

தமிழக அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் முகாமுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், சேலைகள் என்பனவற்றை வழங்கினார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பணமும் 5 கிலோ அரிசி மற்றும் 2 லீற்றர் மண்ணெண்ணெய் என்பனவற்றை வழங்குமாறு தமிழக முதல்வர் மு.கருணாநிதி உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## இலங்கையர்கள் அடங்கிய மேலுமொரு படகு ஆஸி கடற்படையினரால் மீட்பு

(கொழும்பு)


இலங்கையர்களும் இருக்கலாம் என நம்பப்படும் படகு ஒன்றை அவுஸ்திரேலிய கடற் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்தப் படகில் படகோட்டிகளுடன் 23 பேர் இருந்துள்ளனர்.

வடமேற்கு அவுஸ்திரேலிய கடற்பிராந் தியத்தில் கைது செய்யப்பட்ட இவர்கள் வழமையான சோதனைகளுக்காக கிறிஸ்மஸ் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள் ளனர்.

இதனிடையே இந்த வருடத்தில் மாத்திரம் ஏராளமான அகதி அந்தஸ்து கோருவோர் அவுஸ்திரேலியாவிற்கு சென்றுள்ளதாக அவுஸ்திரேலிய பெடரல் எதிர்க்கட்சியின் பேச்சாளர் மைக்கல் கீனன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எல்லை கட்டுப்பாடுகளில் அவுஸ்திரேலிய அரசாங்கம் தளர்வைக் கண்டு வருவதே இதற்கான காரணம் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ)



புத்தளம் இந்துமகாசபையில் அண்மையில் நடைபெற்ற கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தனின் பாரியார் புத்தளம் இந்து மகாசபைத்தலைவர் வை. ஸ்ரீராமச்சந்திரனுக்கு புத்தகப் பொதியொன்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## 2010.11 08 இன்றைய நாளின் முன்னைய பதீவுகள்

- 1520 -டென்மார்க் படைகள் சுவீடனை முற்றுகையிட்டன. சுமார் 100 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1811 - இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும், Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.
- 1889 - மொன்டானா ஐக்கிய அமெரிக்காவின் 41வது மாநிலமாக இணைந்தது.
- 1895 - எதிர்மின் கதிர்களைச் சோதனையிடும்போது வில்ஹெம் ரொண்ட்ஜென் எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தார்.
- 1917 -ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சியை அடுத்து லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருக்கு முழு அதிகாரமும் தரப்பட்டது.
- 1923 - மியூனிக் நகரில் ஹிட்லர் தலைமையில் நாசிகள் ஜெர்மனிய அரசைக் கவிழ்க்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.
- 1938- பாரிஸ் நகரில் ஜெர்மனிய தூதுவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் யூதர்களுக்கு எதிராக வன்முறைகள் கிளம்பின.
- 1939- மியூனிக் நகரில் ஹிட்லரைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 1942- மேற்கு உக்ரேனின் தெர்னோப்பில் நகரில் நாசி ஜெர்மனியினர் 2 ஆயிரத்து 400 யூதர்களைபெல்செக் நகரில் இருந்த வதை முகாமுக்கு அனுப்பினர்.
- 1950- கொரியப் போர்: ஐக்கிய அமெரிக்க வான் படையினர் வடகொரிய மிக் விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தினர்.
- 1965-பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் மண்டலம் அமைக்கப்பட்டது.
- 1977- கி.மு 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மன்னன் இரண்டாம் பிலிப்பு என்பவனின் சமாதி மனோ லிஸ் அண்ட்ரோனிக்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1987- வடக்கு அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவ நினைவு நிகழ்வொன்றில் ஐரியக் குடியரசு இராணுவத்தி னரின் குண்டு வெடித்ததில் 12 பேர் கொல்லப்பட்டனர்
- 2006-வாகரை குண்டுத் தாக்குதல்: மட்டக்களப்பு வாகரையில் இலங்கை இராணுவத்தினர் ஏவிய பல்குழல் எறிகணை வீச்சுத் தாக்குதலில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 125 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
- 2006- பாகிஸ்தானில் தர்காய் என்ற இடத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 45 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

### பிறப்புகள்

- 1656 - எட்மண்ட்ஹேலி, பிரித்தானிய வானியல் ஆராய்ச்சியாளர் (இ.1742)
- 1680- வீரமா முனிவர், இத்தாலிய தமிழறிஞர்(இ.1847)
- 1900 - ந.பிச்சமூர்த்தி,தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (இ. 1976)
- 1923 - ஜாக் கில்பி,அமெரிக்க மின்னியல் பொறியாளர் (இ.2005)
- 1927 -லால் கிருஸ்ண அத்வானி, இந்திய அரசியல்வாதி
- 1984 -நயன்தாரா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- 1958 - சி.கணேசையர்,ஈழத்து தமிழறிஞர் (பி.1878)



1902 -ஜி.ஜி.பொன்னம்பலம் இலங்கையின் தமிழ் அரசியல்வாதியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும். (இ.1977)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை


மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1,2,3 ஆம் பாதங்கள்)

**தொழில் மாற்றம் தேடி வரும்! துணையாவும் மாறிவிடும்!**

**எவரிடமும் எளிதாக நெருங்கிப் பழகும், இனிய சுபாவத்தைப் பெற்ற மிதுன இராசி நேயர்களே!**

மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லி விடும் உங்களுக்கு வாயில் தேடி வந்து விட்டது குருப்பெயர்ச்சி! பத்தில் குரு வந்தால் பதவி பறிபோகும் என்று பயப்பட வேண்டாம். முத்தான உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் அத்தனையும் குருவின் பார்வை பலத்தால் கிடைக்கப்போகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இரவு முதல் சுமார் ஐந்தரை மாத காலங்கள் குருவின் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதியப்போகிறது. அப்புறம் என்ன? பண மழையில் நனையப் போகிறீர்கள். பாச மழையில் உலா வரப்போகிறீர்கள். தினம் ஒரு நல்ல தகவல் உங்களைத் தேடி வரப் போகிறது.

இதுவரை ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்த்த குரு பொன், பொருள்களை சேர்த்து கொடுத்ததா? பொருளாதாரத்தை விருத்தி செய்து கொடுத்ததா? எதுவும் ஒரு நிலையான பலனைத் தரவில்லையே என்று நினைத்த உங்களுக்கு, உருட்டி விட்ட பந்து போல, அங்கும் இங்குமாய் ஓடி வந்த குரு, இப்பொழுதுதான் உங்களுக்கு அற்புதமான பலன்களை வழங்கப்போகிறார்.

சுய ஜாதகத்தில் குரு இருக்குமிடம், பார்க்குமிடங்களை ஆராய்ந்து அது தரும் யோகம் செயற்பட சிறப்பு தலங்களைத் தேர்ந்தெடுத்து அனுகூல நட்சத்திரம் அமைந்த நாளில் வழிபாடு செய்து வாருங்கள்.

யோகம் தரும் எண் களின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்க ளையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயர்களையும் அமைத்துக் கொண்டு பணியை தொடருங்கள். மணியான வாழ்க்கை மலரும்.

குரு உங்கள்இராசியைப் பார்க்கவில்லையே என்றாலும் கூட, உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். குருவின் 5,7,9 ஆகிய பார்வைகள் பதியும் இடமெல்லாம் புனிதமடையும் என்பது சாஸ்திர நியதி, அந்த குரு எந்த இடத்தில் இருந்து கொண்டு பார்க்கிறதோ, அந்த இடத்திற்குரிய ஆதிபத்ய பலன்களை தன் பார்வை மூலம் சேர்த்து வழங்கும்.

சுமார் ஐந்தரை மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு ஆச்சரியமான வாழ்க்கையை உங்களுக்கு தன் பார்வை பலத்தால் அமைத்துக் கொடுக்கப் போகிறது. குறிப்பாக, இராசிக்கட்டம் பன்னிரெண்டிலும், தனஸ்தானத்தையோ இலாப ஸ்தானத்தை யோ, சுகஸ்தானத்தையோ அல்லது இராசியையோ குரு பார்க்கும் பொழுது தான் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படுகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, இந்த குருப்பெர்ச்சி உங்களுக்கு சாதகமாகவே இருக்கிறது. கூட்டுத் தொழிலில் மாற்றத்தைச் செய்து, ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு, வாட்டங்களைப் போக்கி வழிகாட்டப்போகிறது.

**எதிலும், எப்பொழுதும் புதுமையை விரும்புபவர்கள்!**

எல்லோரிடத்திலும் எளிதாகப் பழகும் சுபாவம் உங்களுக்கு உண்டு. நண்பர்களை ஆயிரக்கணக்கில் பெற்றிருந்தாலும், ஒரு சில நிமிடம் மட்டுமே மனம் விட்டுப் பேசுவீர்கள். புகழ் பெற்ற மனிதர்களாக விளங்கவேண்டுமென்ற எண்ணம் இளமையிலேயே உங்கள் மனதில் பதிந்திருக்கும்.

மதிநுட்பம் நிறை ந்த நீங்கள் மனதில் தோன்றும் புதுப்புது கருத் துக்களை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பீர்கள். புதுமையை எப்பொழுதும் விரும்புவீர்கள்.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவர்களின் நட்பு எப்பொழுதும் உங்களுக்கு உண்டு. நீங்கள் பிறரை கவர்வதில் கைதேர்ந்தவர்கள்.

காரணம், உங்களுடைய ஆலோசனைகள் மற்றவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தான். எந்தவொரு தகவ லையும் கேட்டவுடன் முடிவெடுக்காமல், மனதில் கிரகித்துக் கொண்டு,எப்படி செயற்பட்டால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து செயற்படுவதால் தான் நீங்கள் வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க முடிகிறது.

அமைதியும்,அடக்கமுமே உங்களுக்கு பலமாக அமைகிறது. ஆர்ப்பரிப்பு உங்களுக்கு பிடிப்பதில்லை. இப்படிப்பட்ட குணங்களை பெற்ற உங்களுக்கு, பெயர்ச்சியாகி வந்த குரு எந்தெந்த வழிகளில் எல்லாம் உங்கள் சிந்தனையை வெற்றியடைய வைக்கப் போகிறார் என்பதைப் பற்றி பார்ப்போம்.

**"பத்திலே குருவும் வந்தால்,**
**பதவியில் மாற்றம் சேரும்!**
**முத்தானவாழ்வில் வந்த**
**முட்டுக் கட்டைகள் அகலும்!**
**கொத்தோடு விலகும் துன்பம்!**
**கூடுதல் கவனம் வைத்தால்**
**தத்தளிக்கின்றவாழ்வில்**
**தனத்தோடு புகழும் கூடும்!"**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, தொழில் ஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு சுய ஜாதகத்தில் தெசா புத்தி பலமிழந்தவர்களுக்குத் தொழில் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றங்களை உடனடியாக வழங்கலாம். மற்றவர்கள் பயப்பட தேவையில்லை. அரசியல்வாதிகள் புதிய பொறுப்புகளையும், பதவிகளையும் பெற இந்த குருவழி வகுப்பார். குருவின் பார்வை பலத்தால் பண பலம் கூடுகிறது என்பதால், பயணத்தை தொடங்குங்கள். பக்தியில் மனதை செலுத்துங்கள்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை பதியும் இடங்களான 2,4,6 ஆகிய இடங்கள் சுமார் ஐந்தரை மாதங்கள் புனிதமடைந்து பொன்னான வாழ்க்கையை உங்களுக்கு அமைத்துக் கொடுக்கப்போகிறது. பார்வை பலத்தால் வாக்கு, தனம், குடும்பம், தாய், சுகம், வாக னம், எதிர்ப்பு, வியாதி, கடன், உத்தியோகம், தொழில் ஆகிய அனைத்து வழிகளிலும் நீங்கள் எதை எதையெல்லாம் எதிர்பார்த்து காத்திருந்தீர்களோ, அவற்றையெல்லாம் வழங்கி ஆச்சரியப்பட வைக்கப் போகிறது.

குறிப்பாக, கொடுத்தவாக்கை காப்பாற்றுவீர்கள். இதுவரை வாக்கு கொடுத்ததை காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலை மேலோங்கி இருக்கலாம். இனி அந்த கவலை தீரும். தாராளமாகச் செலவிட ஏராளமாக தொகையும் வந்து கொண்டே இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகவில் லையே என்ற கவலை மாறும், ஒரு காரியத்தைச் செய்ய பணத்தை வைத்துக் கொண்டு செய்ய வேண்டுமென்று இனி நினைக்க வேண்டாம். காரியத்தை தொடங்கி விட்டால், காசு, பணம் தானே வந்து சேரும். அது தான் குரு பார்வைக்கு கிடைத்த வெற்றியாகும்.

நீங்கள் குடும்பப் பொறுப்பை ஏற்றிருப்பதால், கடுமையாக பிரயாசை எடுத்தும் இதுவரை முடிக்க முடியாத காரியங்களை எல்லாம் இப்பொழுது, எளிதில் முடித்துவிடுவீர்கள்.

பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடு த்த தொகை கூட வந்து சேரும். பணப்பற்றாக் குறை அகலும், இந்த நேரத்தில் இனத்தார் மற்றும் உறவினர்களின் பகை கூட மாறலாம். குணத்தோடு பழகும் நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

பங்காளிகள் பலமாக இருக்க,பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். தாயின் உடல் நலம் சீராகும். தாய்வழி உறவினர்களால் தகுந்த பலன் கிடைக்கும்.

கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். படிப்பில் இருந்த தடை அகல தெசா புத்திக் கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுப்பதோடு கலை மகளையும் கை கூப்பி வணங்குங்கள்.

பட்டப்படிப்பை பாதியில் விட்டவர்கள்கூட மீதியும் தொடர்ந்து மேலான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழி பிறக்கும். கட்டிய வீட்டை பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும். கரையான் மருந்து அடித்து, தரையைச் சீராக்கி, கவனம் முழுவதையும் வீட்டின் மீது செலுத்துவீர்கள்.

கட்டிய வீடாக வாங்க நினைப்பவர்களுக்கும் எதிர்பார்த்த தொகைக்கே இல்லம் கிடைக்கும். இடம், பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகன்று பாதியில் நின்ற பத்திர பதிவை முடித்துக் கொள்வீர்கள்.

ஆறாமிடத்தில் குருவின் பார்வை பதிவதால் எதிரிகள் உதிரிகளாவர். இதுரை தொல்லை கொடுத்து வந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர்.உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் இதயம் மகிழும் விதத்தில் வந்து சேரும்.

உயரதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். எனவே, நீண்ட நாட்க

**சிவல்புரி சிங்காரம்**

ளாக எதிர்பார்த்து வந்தசலுகை கள் இப்பொழுது வந்து சேரும். சங்கிலித் தொடர் போல வந்த கடன் சுமை இனி குறையும். மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து ஆதரவு கரம் நீட்டுவர்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு**

பத்தாமிடத்தில் குருவால் முத்தான வாழ்க்கை அமையவும் முன்னேற்றங்கள் வந்து சேரவும் குருபகவானை வழிபட்டு வாருங்கள்.

**மிதுனஇராசிப் பெண்களுக்கு பண வரவு திருப்திதரும்**

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி பணப்புழக்கத்தை அதிகரிக்கச் செய்யும். மனதிற்கு பிடித்தவர்களின் ஒத்துழைப்போடு மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். தாய்வழி ஒத்துழைப்பு கிடைக்கும். உங்கள் கணவர் உங்கள் பெயரிலேயே வீடு மற்றும் இடங்கள் வாங்க முன்வருவார். தொழிலில் கூட பங்குதாரர்களாக உங்களையும் சேர்த்துக் கொள்ளலாமா? என்று யோசிப்பார்.

மாமியார், மாமனார், நாத்தனார் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். குல தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்வது நல்லது. குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் ஒருவர் உங்கள் இராசியிலேயே பிறந்திருந்தால் அதற்குரிய வழிபாடு, பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. (தொடரும்)





சர்வதேச முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினவிழா கடந்த மாதம் 11ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொடிகாமம் ப.நோ.கூ.ச. பொதுமுகாமையாளர் எஸ்.தேவகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.ஞானவேல், உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.ரஞ்சனா, தியாகி அறக்கொடை நிறுவனப் பணிப்பாளர் ரி.கமலநாதன் ஆகியோர் நிற்பதையும் உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர்.ரகுநாதன் முதியவரை கௌரவிப்பதையும் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் கே.சண்முகலிங்கம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# மகிழ்ச்சி உங்கள் கையில்....

நம்முடைய இரகசியங்கள் ஒவ் வொன்றும் இனிமையான அனுபவம்; ஒரு மனிதனின் அடிப்படை மனக் கிளர் ச்சி என்பது உண்மையான கலை மற் றும் உண்மை யான அறிவியலின் பிறப் பிடமாகும் என அல்பேர்ட் ஐன்ஸ்டீன் கூறி யுள்ளார்.நாம் நலமாக இருக்கி றோம் என்பதை உணர்த்தும் நிலையை மகிழ் ச்சி என்போம்.

மனதளவிலும் உடலளவிலும் சமூகம் சார்ந்த நிலைகளிலும் சமநிலையில் இருக்க மகிழ்ச்சி என்பது உதவியாக இருக்கும். ஆசைகளும் பயமும் நம்மு டைய எண்ணத்தை கிளர்ச்சியடையச் செய்கின்றன. மேலும் நமக்குள் இருக் கும் மகிழ்ச்சியான எண்ணங்களை மங்கலாக் குகின்றன. நம்முடைய ஆசைகள் நிறை வேறும் போதோ, நம்முடைய பயம் வில கும்போதோ நம்முடைய மனக் கிளர்ச்சி தற்காலிகமாக விலகிவிடும். அந்த நிலை தான் உள்ளார்ந்த மகிழ்ச்சி பிறக்கிறது.

நாம் அறிய வேண்டிய உண்மை என்ன வென்றால், நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு முன் நிபந்தனை எதுவும் தேவையில்லை மற்றும் இந்த நொடியை தவிர மகிழ்ச்சியாக இருக்க நேரம் எதுவு மில்லை என்பதாகும். உங்களின் மன தில் மகிழ்ச்சி இல்லையா? அதற்கான காரணத்தை உங்களிடம் நீங்களே கேளுங் கள். அதற்கு கிடைக்கும் பதில் சாதக மான ஒன்று என்றால் அதை நோக்கி உங்கள் பயணத்தை செலுத்துங்கள்.

### உங்களுடைய தனிப்பட்ட இலக்கை நிர்ணயுங்கள்

உங்கள் எண்ணத்தில் தோன்றும் தனிப் பட்ட இலக்கை நோக்கி உங்கள் பயணத்தை ஆரம்பியுங்கள். அதுவே உங்களுடைய வாழ்க்கைக்கும் அர்த்தத்தைக் கொடுக்கும். உங்களுக்கு ஏற்படும் மனஅழுத் தங்கள், இழப்புக்கள் போன்றவற் றை பக்குவமாக எடுத்துக் கொள் ளுங்கள்.உலகத்துடன் இணை ந்து இருங்கள்.தனிமையாக இருந்து வாடு வதைத் தவிர்த்து மற்றவர்களுடன் பழகுங்க்ள். உங்களுக்கு கஷ்டமான சூழ்நிலை ஏற் படும் போது இது மிகவும் உதவும்.



உலகுடன் ஒத்துவாழும் போது தான் உங்களைப் பற்றி நீங்கள் முழுமையாக அறியமுடியும். அவ்வாறு அறிந்தால் போகிற போக்கில் அனைத்து பிரச்சினை களையும் தீர்த்து விடலாம்.நட்பு வட்டாரத்தை பெருக்குங்கள்.கோயில்கள், தேவாலயங்கள் என எங்கு உங்களுக்கு அமைதி கிடைக்கிறதோ அங்கு உங்கள் குடும் பத்துடன் செல்லுங்கள் அல்லது நண்பர்க ளுடன் செல்லுங்கள். வழிபாட்டின்மூலம் ஏற்படும் அமைதி மனதில் உருவாகும் அழுத் தங்களைக் குறைக்கும். நமக்கும் நண்பர்க ளுக்கும் இடையேயான நெருக்கத்தை அதிகப் படுத்தும்.இது இக் கட்டான சூழ்நிலைகளில் உங்களுக்கு உத வியாக இருக்கும்.

### ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழுங்கள்

சத்தான உணவு, சுத்தமான காற்று, தின மும் உடற்பயிற்சி போன்றவை நம் முடைய உடலை ஆரோக்கியமாக வைத்திருப்ப தோடு மட்டுமல்லாமல் நம்முடைய எண்ணங் களையும் புத்துணர்ச்சி பெறச் செய்யும். நேர் மையான எண்ணங்களை கொள் ளுங்கள். ஒரு செயலைச் செய்ய ஆரம் பிக்கும் போது அதை நேர் மறையான எண்ணத் துடன் அணுகுங்கள்.

அவ்வாறு எடுத்துக்கொண்டால் நீங்கள் மேற்கொள்ளும் வேலையில் வரும் சங் கடங்களையும், இடைஞ்சல்களையும் சமா ளிக்கும் மனப்பக்குவம் பெறலாம். உங்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும் காரணிகளை எண்ணி அதை சரியாக்கும் முயற்சிகளை அப்பொழுதே எடுக்கவேண்டும். மேற் கூறிய காரணிகளை கடைப்பிடித்தால் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# உங்கள் குழந்தைகள் உன்னதமானவர்களே!



எந்தப் பெற்றோரும் காலையில் கண் விழிக்கும் போதே தமது குழந்தை களைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்று நினைத் துக்கொண்டு எழுவது கிடையாது. ஆனால் குழந்தைகளுக்கும், பெற்றோர் களுக்கும் நடுவே ஒரு இடைவெளி இருக்கத் தான் செய்கின்றது. அதற்குக் காரணம் இருவரும் ஒருவர் நினைப்பதை ஒருவர் சரியான வார்த்தைகளால், சரியாகப் புரிந்து கொள் ளும் வகையில் வெளிப்படுத்தத் தெரியா மல் இருப்பதே ஆகும்.

குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக் கும் இடையில் சரியான புரிதலை ஏற்படுத்த சரியான தொடர்புகொள்ளும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

பெற்றோர்கள் பேசுவதையும், குழந்தை கள் பேசுவதையும் சற்றுக் கவனமாகக் கேட் டால் ஓர் உண்மை விளங்கும். இருவருமே ஒருவர் பேசுவதை மற்றவர் முழுமையாகக் கேட்பதில்லை என்பதே அது. இருவர் தனித் தனியாக பேசிக்கொள்வது போலவே தோன் றும். அறிவுரை வழங்குவது, விமர்சிப் பது பெற்றோர்களின் போக்காகவும், அதை ஏற்றுக்கொள்ளா, மனோபாவம், தாங்கள் விரும்புவதையே வலியுறுத்துவது ஆகியவை குழந்தைகளின் சுபாவமாகவும் வெளிப்படுவ தைக் காணலாம்.

இதில் வருத்தப்படக்கூடிய விடயம் என்ன வென்றால், ஒருவருக்கொருவர் மனதில் ஆழமான அன்புடையவர்களாக இருந் தாலும், அவரவரின் தன்மைக்கேற்ப உற வுக்கு மதிப்புக்கொடுத்து வெளிப்படுத்தத் தெரிவதில்லை.

இருசாரருமே மதிநுட்பமுடையவர்களாக இருந்தாலும் வெளிப்படுத்தும் திறன் குன்றி யவர்களாகவே உள்ளனர். தொடர்பு கொள்ளு தல் என்பது பெற்றோர், குழந்தைகள் ஆகிய இருவருக்குமே அவரவர் அடையாளத்தை யும், அவரவரின் சுயமரியாதையையும் பாது காக்கும் வகையில் இருக்கவேண்டும்.

பாடசாலை மூலமாக சுற்றுலா செல்லத் தயாரானான் ஓர் ஒன்பது வயதுச் சிறுவன். திடீரென பெய்த மழை காரணமாக அவனால் போக முடியவில்லை. பொதுவாக ஒரு தாய் இதுபோன்ற சூழ்நிலைகளில், 'அழுவதால் பிரயோசனம் இல்லை, நாங்கள் ஒன்றும் மழையை வர வைக்கவில்லை, ஏன் எங்கள் மீது கோபப்படுகிறாய்?' என்ற கூறுவது வழக் கம்.

ஆனால் அந்தத் தாய் அவ்வாறு செய்யாமல் தனது மகனைப் பார்த்து, 'இது உனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கும் என்பதை உணருகிறேன், என்று கூறிய வுடன், 'ஆம்' என்கிறான் அவரது மகன்.



'உனது மகிழ்ச்சிகரமான நிலையை மழை வந்து கெடுத்துவிட்டது, என்று தாய் கூறுகி றார். மகனும், 'ஆம்' நீங்கள் சொல்வது சரிதான், என்று கூறிச் சில நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டு, 'அடுத்த முறை பார்த்துக் கொள்ளலாம்' என்று தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொள்கின்றான். அவனது கோபம் தணிந்து விடுகின்றது.

குழந்தைகள் உணர்ச்சி மயமாக இருக் கும்போது அவர்கள் மனதில் உணருவதை முழுமையாக வெளிப்படுத்த முடிவதில்லை அல்லது வெளிப்படுத்த தெரிவதில்லை. ஆனால் அதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றே எதிர்பார்க் கின்றனர்.

ஆறு வயது பெண்குழந்தை தன் தாயிடம், தம்பிக்கு மட்டும் அவர்கள் அதிக மாக பரிசுப்பொருட்கள் வழங்குவதாகவும், தனக்குக் குறைவாகவே கொடுப்பதாகவும் குறை கூறுகின்றாள். தாய் அதை மறுக்க வில்லை. அதேசமயம், இனிமேல் அக் குறையைச் சரி செய்துவிடுகின்றேன் என்று எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை. குழந்தைகள் ஆழமான அன்பையே விரும்புகின்றார்கள். பரிசுப்பொருளின் அளவு பெரிதா, சிறிதா என்பதல்ல என்று அந்த தாய்க்கு நன்கு தெரியும். 'உனக்கும் அதிகமாக பரிசுப்பொருட்கள் வேண்டும்.... அவ்வளவுதானே?' என்று கூறிக்கொண்டே குழந்தையை அரவணைத்துக் கொள்கின் றார். புன்முறுவலுடன் குழந்தை மனத் திருப்தி அடைகின்றது. அதனால் வீணான பேச்சுக்கு இடமில்லாமல் போகின்றது.

ஓர் ஐந்து வயதுச் சிறுவனை குழந் தைகள் பாடசாலைக்கு அழைத்துச் செல்கி றார் தாய். அங்குள்ள வண்ண ஓவியங் களைப் பார்த்துவிட்டு ஏன் இவை இவ்வளவு அசிங்கமாக உள்ளன? என்று கேட்கிறது குழந்தை.உடனே தாய், அழகான படங் களை இப்படித் தவறாக விமர்சிக்கக் கூடாது என்று குழந்தையைக் கடிந்து கொள்கின் றார். (தொடரும்)

# வெளிநாட்டு மொழியை கற்பது எளிதா?

(25ஆம் திகதி தொடர்ச்சி....)

அதேநேரத்தில் சிறுவயதில் ஒன்றுக் கும் மேற்பட்ட மொழிகளை கேட்க வாய்ப் புக் கிடைத்தவர்கள் மட்டுமே, புதியமொழி யைக் கற்க முடியும் என்று கூறிவிட முடியாது. எந்தவொரு புதிய மொழியாயி னும், உள்நாட்டில் மற்ற பகுதிகளில் உள்ள மொழியானாலும் சரி, அல்லது வெளி நாட்டு மொழியாக இருந்தாலும் சரி, புதிய மொழியைக் கற்பதற்கு அக்கறை யும் ஆர்வ மும் தான் தேவை.வயது, ஆண், பெண் என்ற எந்தப் பாகுபாடும் என எதுவும் புதுமொழி கற் பதற்குத்தடையில்லை. ஆனால் புதியமொழிக் கான பயிற்று மொழி தெரிந்திருப்பது அவசியம்.

ஒருபுதிய மொழியைக் கற்றுக்கொள் வது, மற்ற விடயங்களைக் கற்றுக்கொள் வது போன்று சுலபமானதல்ல.குறிப்பாக ஆரம்ப கட்டத்தில்அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் , ஏற்கனவே மூளை யில் (மனதில்) பதிந்துள்ள உச்சரிப்பு, சொற் பிரயோகம், வாக்கிய அமைப்பு, இலக்கணம், எழுத்து வடிவம் போன்றவைகளில் இருந்து புதிய மொழி மாறுபட்டிருக்கும். இந்தப் புதுவரவை ஏற்றுக்கொள்வதற்கு மூளை சிறிது சிரமப்படும்.நாம்



பேசிக்கொண்டிருக்கும் தாய் மொழியை கற்கும் போது பல்வேறு வேறு பட்ட சொற்கள் (Lexical), வார்த்தை யின்பொருள் (Semanatic), பயன்பாட்டு (Pragmatic), வாக்கிய அமைப்பு (Syntactic constraints) ஆகியவற்றை தானாகவே ஏற்றுக்கொள்வோம்.


புதிய மொழியைக் கற்கும்போது இவற் றைக் கிரகித்துக் கொள்வதற்கு சிறிது சிரமம் ஏற்படும்.புதிய மொழியை கற்றுக்கொள்ளும் போது அதனை தெளிவாக உச்சரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஒருவர் எத்தனை மொழிகளை வேண்டு மானாலும் கற்க முடியும். புதிய மொழியை கற்பது அவரது ஆர்வம் மற்றும் அக்கறை யைப் பொறுத்தது.புதிதாக கற்ற மொழியில் வெளியாகும் இதழ்கள், நூல்கள், செய்திப் பத்திரிகைகள் போன்றவற்றைப் படிக்க வேண்டும்.

இதனால், அந்த மொழியில் பயன்படுத் தப்படும் பல வார்த்தைகளை தெரிந்து கொள்ள முடியும்.பல்வேறு வாக்கிய அமைப் புக்கள், இலக்கணத்தைக் கையாளும் முறை ஆகியவற்றை அறியமுடியும்.புதிய வார்த் தைகளுக்கு அகராதியின் துணையுடன் அதன் அர்த்தத்தை அறிவதால், பல்லா யிரக்கணக்கான வார்த்தைகள் மனதில் பதி யும். வானொலி , தொலைக்காட்சி நிகழ்ச்சி களைக் கேட்பதால் மாறுபட்ட உச்சரிப்புகளை அறியமுடியும்.

இந்த முறைகளைக் கடைப்பிடிப்பதால் குறுகிய காலத்தில், புதிதாக கற்றுக்கொண்ட வெளிநாட்டு மொழியில் தேர்ச்சியடைய லாம். வெளிநாட்டு மொழியை பொதுவாக, வழக்கமான முறைகளில் கற்றுக்கொள்வு துடன், உங்களின் தொழிற்துறையைச் சார்ந்த இதழ்கள், புத்தகங்கள் படித்தல் மூலமாக தொழில் தொடர்பான தகவல், செய்திகளைப் புரிந்துகொள்ளவும், மொழி பெயர்க்கவும் எளிதாக இருக்கும்.ஒவ்வொரு மொழியிலும் பொது அகராதி, துறை வாரி யான அகராதிகள் கிடைக்கின்றன.இதன் உதவியால் சிறப்பாகவும், துல்லியமாகவும் விரைவாகவும் மொழி பெயர்க்கலாம்.

# 70 வயது தாத்தா போன்று முகமூடியணிந்து கனடாவிற்குள் பிரவேசித்த இளைஞர் கைது



20 வயதுள்ள சீன இளைஞர் ஒருவர் 70 வயது மதிக்கத்தக்க தாத்தா போன்று வேடம் பூண்டு முகமூடியணிந்து கனடாவிற்கு நேற்று முன்தினம் வந்த பின்னர் கைது செய்யப்பட்ட விடயம் கனடாவில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

கனேடிய ஊடகங்கள் அனைத்திலும்இது தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட படங்கள் மற்றும் வீடியோக்கள் விமான நிலையங்களில் இருக்கும் பாதுகாப்பு சோதனைகளையும் கடந்து ஒருவர் எப்படி இது போன்ற முறைகளில் வந்திருக்க முடியும் என பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதனையடுத்து புகலிடம் நாடி வந்த தன் கட்சிக்காரர் குறித்த தகவல்களையும் படங்களையும் குடிவரவுத்துறை இரகசியமாக வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் அனைத்து ஊடகங்களும் அதனை வெளியிட்டமையானது அகதியாக வந்த ஒருவரை அவமானப்படுத்தும் விதத்தில் குடிவரவுத்துறை நடந்து கொண்டுள்ளது என்பதற்கு சாட்சியம்.

மேலும் இந்த விடயம் கனேடிய மக்களையும்பாதித்துள்ளது. ஆங்கில மொழி அறியாத சீனாவைச் சேர்ந்த தன் கட்சிக்காரர் தானாக இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்க வாய்ப்பில்லை. ஆட்கடத்தல்காரர்கள் அவருக்கு உதவியிருக்கக் கூடும் என வழக்கறிஞர் மேலும் கூறியுள்ளார்.

கனடாவிற்கு வரும் 99.9 வீத அகதிகள் ஆட்கடத்தல்காரர்களின் உதவியுடனே வருவதாகவும் அவர்கள் கொடுக்கும் ஆவணங்களையே வேறு வழியின்றி நம்பி எடுத்து வருவதாகவும் கூறியுள்ள பாதிக்கப்பட்ட இளைஞனின் வழக்கறிஞர் குடிவரவுத்துறை அதிகாரிகள் சோதனை என்ற பெயரில் நேற்று முன்தினம் அகதியாக வந்தவரிடம் மனிதாபிமானம் சிறிதுமின்றி நடந்து கொண்ட விதத்தை தான் வெளியில் கூற விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அகதிகளாக கனடா வருபவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகி விட்டது எனவும் அவர் தெரியப்படுத்தியுள்ளார். இளைஞர் குறித்த முழுமையான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு இன்று டெஹ்ரானில்

ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை தொடர்பான 9 ஆவது மாநாடு இன்றும் நாளையும் ஈரானின் தலை நகர் டெஹ்ரானில் இடம்பெறவுள்ளதாக ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரெமின் மெஹமன்பாரஸ்ட் வெளியிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில் 31 ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. பிராந்தியத்தில் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக பேச்சாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## இந்தியாவுக்கு சாதகமான சலுகைகள் எதையும் ஒபாமா அறிவிக்கக்கூடாது

### பாகிஸ்தான் வலியுறுத்தல்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியாவுக்கு வந்து உள்ள நிலையில் பாகிஸ்தான், இந்தியாவுக்கு சாதகமாக சலுகைகள் எதையும் ஒபாமா அறிவிக்கக்கூடாது என்று அமெரிக்காவை வலியுறுத்தி வருகின்றது. இது தொடர்பாக பாகிஸ்தான் அரசாங்கம் அமெரிக்க நிர்வாகத்துக்கு அடுத்தடுத்து அழுத்தம் கொடுத்து வருகின்றது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. இது தொடர்பாக அது காய் நகர்த்தி வருகிறது. உலக அளவில் பல நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்து உள்ள நிலையில் அமெரிக்கா இன்னும் சாதகமாக எதையும் கூறவில்லை.

இந்த நிலையில் ஒபாமா இந்தியாவுக்கு வருகைதந்து இருக்கிறார். அவர் இந்தியாவில் தங்கி இருக்கும் போது நிரந்தர உறுப்பினர் பதவி தருவது தொடர்பாக இந்தியாவுக்கு சாதகமாக எதையும் கூறி விடக்கூடாது என்பதில் பாகிஸ்தான் உறுதியாக இருக்கிறது.

இது குறித்து அமெரிக்க அதிகாரிகளிடம் அது தன் விருப்பத்தைக் கூறி அமெரிக்க அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகிறது. (ஸ்ரீ-2)






இந்தோனேஷியா மெராபி எரிமலை கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் தன் கொடூரத்தை காட்டியது. தீக்குழம்பு , சாம்பலை ஆக்ரோசத்துடன் கக்கியது. இதில் பல கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. யோக்யாகர்த்தா கிராமம் முழுவதும் சாம்பல் நிறைந்து காணப்படுவதை படத்தில் காணலாம்.

## அங்கோலா இராணுவத்தினரால் 700 கொங்கோ பெண்கள் கற்பழிப்பு!

### ஐ.நா.சபை திடுக்கிடும் தகவல்

(கின்ஷாசா)

ஆபிரிக்கா கண்டத்தில் கொங்கோ மற்றும் அங்கோலா நாடுகள் அமைந்துள்ளது. கொங்கோ நாட்டின் கனிமவள சுரங்கங்கள் அங்கோலாவின் எல்லையில் காணப்படுகிறது.

இங்கு கொங்கோ நாட்டுப் பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில்தங்கள் நாட்டுக்குள் புகுந்து விட்டதாகக் கூறி அவர்களை அங்கோலா இராணுவத்தினர் கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர்.

அவ்வாறு சிறையில் அடைக்கப்படும் பெண்கள் அங்கோலா இராணுவ வீரர்களால் கற்பழிக்கப்படுவதாக ஐ.நா அதிகாரிகளுக்கு புகார்கள் வந்துள்ளன.

இதற்கமைய கடந்த சில நாட்களுக்கு முன்பு அங்கோலா சிறையில் அடைக்கப்பட்டிருந்த 30 பெண்கள் கூட்டாக கற்பழிக்கப்பட்டு நிர்வாண நிலையில் கொங்கோ நாட்டு எல்லையில் வீசப்பட்டதாக திடுக்கிடும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதைத்தொடர்ந்து ஐ.நா.சபையின் மனித உரிமை முகவர் விசாரணை நடத்தியதில் கொங்கோவை சேர்ந்த 700 பெண்கள் கற்பழிக்கப்பட்டது தெரிய வந்தது.

இந்தத் தகவலை இந்நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் மவுரிஷியோ குலியானா தெரிவித்துள்ளார். இச்சம்பவங்கள் குறித்து 2 நாடுகளிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-2)

## ஒபாமா எங்கள் உணர்வுகளை புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்

### முஷாரப் தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எங்கள் உணர்வுகளை புரிந்து கொள்ளத் தவறிவிட்டார் என பாக்.முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

ஆசியப் பயணமாக முதன்முறையாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஒபாமா தன் பயணத்தில் பாகிஸ்தான் நாட்டை இணைக்கவில்லை. இது குறித்து முஷாரப் கூறுகையில்,

ஒபாமா இங்கு வராதது எனக்கு வருத்தமே. பாக். மக்களின் உணர்வை அவர் அறியவில்லை. இந்தியா செல்லும் போது காஷ்மீர் விவகாரம் குறித்து பேசுவார் என நான் கருதவில்லை.பாக்- இந்தியா உறவு குறித்த பயணம் என்பதை நான் உணர்ந்தாலும் இந்தியாவை மட்டுமே மனதில் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆசிய கண்டத்தில் பாகிஸ்தானும் ஒரு முக்கியநாடு தானே. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் முதன்மையான நாடு பாகிஸ்தான். அல்குவைதா , தலிபான்களை எதிர்த்து போராடும் நாடு இது என முஷாரப் புலம்புகிறார் என்று குறிப் பிடப்படுகிறது. (ஸ்ரீ)



ஆப்கானிஸ்தான் வந்த ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் ரோட்ரிகூஸ் ஜபிடிரோவை ஜனாதிபதி ஹமித் ஹர்சாய் வரவேற்பதை படத்தில் காணலாம்.

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.

– லாபுரூயர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அமைதியான சூழலைப் பயன்படுத்தி எமது பிரதேசத்தை வளப்படுத்துவோம்

## நல்லூர் பிரதேச செயலக திறப்புவிழாவில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் இன்றைய அமைதிச் சூழலை பிரதேசங்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்தும் அதேவேளை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்ள தொடர்ந்தும் பாடுபடுவோம் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடத்திறப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் எங்களது தேசியப்பிரச்சினைக்கு நாமே தீர்வு காணும் அதேவேளை அரசு தருவதை விட எமக்குத் தேவையானவற்றை அரசிடமிருந்து கேட்டுப்பெற்றுக் கொள்ளவும்வேண்டும்.

அத்துடன் முதலில் கிடைப்பவற்றைப் பெற்றுக்கொண்டு எமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகப் பாடுபட வேண்டும்.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதவழிப்போராட்டங்கள் மூலம் எமது மக்கள் அழிவையும், இழப்பையும் சந்தித்தனர். எனவே எதிர்காலத்தில் இருப்பவற்றைப் பாதுகாக்க அனைவரும் பாடுபடுவோம். இன்று பேச்சுக்கான, நடமாட்டத்திற்கான சுதந்திரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அந்தவகையில் இந்த அருமையான அமைதிச் சூழலை எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் வளமான எதிர்காலத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளும் அதேவேளை எமக்குக் கிடைக்கவேண்டிய ஏனைய உரிமைகளை அரசுடன் பேசி பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்தும் நாம் யாவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டியது முக்கிய கடப்பாடாகும்.

அத்துடன் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் தொடர்பாக பல்வேறுதிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளநிலையில் அதற்காக மக்களது ஒத்துழைப்பும், ஒத்தாசையும் எமக்குத் தேவையாகவுள்ளது என்றார். (ந-5)

# யாழ்ப்பாணத்தில் நடக்கும் மீற்றிங் கலாசாரம்

அதிகாலை வேளையில் எழுந்து பஸ் பிடித்து தேவையை நிறைவு செய்வதற்காக கந்தோருக்குச் செல்கிறார் ஒருவர்.

கந்தோர் வாசலில் நிற்பவர் என்ன என்று வினவுகிறார்.

ஐயாவைச் சந்திக்க என்பது பதிலாக இருக்க,

ஐயாவைச் சந்திக்க முடியாது என்ற பதில் அதிரடியாக வருகிறது.

ஏன்?

ஐயா மீற்றிங்குக்கு (கூட்டத்திற்கு) போயிற்றார்...

நேற்றும் இப்பிடித்தானே சொன்னனீங்கள்...

நேற்று பலாலியில மீற்றிங்...

அப்ப இண்டைக்கு...

கொழும்பில மீற்றிங்.

எப்ப வருவார்?

சொல்லமுடியாது.

கடவுளே! வாற திங்கட்கிழமையாவது சந்திக்கலாமோ?

திங்கட்கிழமை ஐயா பிரதம விருந்தினர்.

எங்க?

என்ன விடுப்புக் கேட்கிறியள். ஐயா இல்லையெண்டால் போகவேண்டியதுதானே!

வாசலில் நின்றவர் குரைக்கத் தொடங்கினார். தொடர்ந்து கேள்விகேட்டால் ஏஆர்வி போட வேண்டி வந்தாலும் வரும்.

இருந்தும் அம்மாவையாவது சந்திக்கலாமோ? என்று பௌவியமாக கேட்டார் அந்த வயதானவர்.

அம்மா திட்டமிடல் கூட்டத்திற்குப் போயிட்டார்.

திட்டமிடல் கூட்டமோ? அதென்ன?

இந்தாளோட பெரும் கரைச்சல் என்ற முணுமுணுப்போடு வாசலில் நின்றவர் கூறினார்.

மக்களுக்கு எப்படி சேவையாற்றுவது, என்ன திட்டங்களை அமுல்படுத்துவது என்று ஆராய்வதுதான் திட்டமிடல் கூட்டம்.

இந்தப்பதிலைக் கேட்டதும் அந்த முதியவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

என்னையா இப்பிடிச் சிரிக்கிறியள். நான் இப்ப என்ன சொல்லிப்போட்டன்.

மக்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிடல் கூட்டமென்றால் எப்ப பெஞ்சனுக்கு பிறகோ மக்களுக்கு சேவையாற்றுவது...?

முதியவரின் கருத்து முறைப்பாக இருந்தது.

அட தம்பி! அதிகாரிகள் முதலில் கதிரையில குந்தியிருக்கவேணும்.

அங்க மீற்றிங் இங்க மீற்றிங் என்று மிற்றிங்கிலேயே காலத்தை வீணாக்கினால் அந்த அலுவலகமும் பாழாய்ப் போய் மக்கள் சேவையும் நாசமாய் போய்விடும்.

முதியவரின் கூற்று அலுவலக வாசலில் நின்றவரை நெகிழவைத்தது.

நீங்கள் சொல்வது சரிதான் ஐயா! நாங்கள் என்ன செய்யிறது. எத்தனையோ பேர் இங்க வந்து அலைந்து போகினம்.

பலாலியில கூட்டம், ஊரெழுவில சந்திப்பு, திருகோணமலையில மீற்றிங், கொழும்பில கருத்ரங்கு, யாழ்ப்பாணத்தில பயிலரங்கு என்ன செய்யிறது, இவற்றுக்கு மேலாக விழாக்கள், மாலை மரியாதை ஏற்பாடுகள் இதுக்கே நேரம் போதாது. பாவம் பொதுசனங்கள்.

எதிர்பாராத இந்தக்கதையைக் கேட்டதும் முதியவர் இறைவா! என அண்ணாந்தார். அலுவலகத்தின் சுவரில் நோக்கக்கூற்று, பணிக்கூற்று எல்லாம் அழகாக எழுதப்பட்டதை பார்த்த அவர் விம்மி விம்மி அழுதார்.

வீடுசெல்லத் தயாரானபோது, இரண்டுபேர் அவரின் கையில் துண்டுப்பிரசுரங்களைக் கொடுத்தனர்.

'முதியோர் தின விழா' என்று அந்தத் துண்டுப்பிரசுரத்தில் எழுதப்பட்டிருந்தது. முதியவர் தள்ளாடினார். உலகே மாயம்... இந்த உலகே மாயம்... என்ற பாடல் வானலையில் இசைக்கப்படுகிறது.

உலகு மாயம்; யாழ்ப்பாணம் அதைவிட மாயம்.

# காணாமல் போனோர் தொடர்பில் அரசின் தகவல்கள் நம்பிக்கையற்றவை

## சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யுத்தகாலத்தின் போது காணாமல் போனோர் தொடர்பாக அரசாங்கத்தால் தரப்படும் தரவுகள் எவையும் உண்மையானதல்ல; அவற்றை நாம் நம்பப்போவதும் இல்லை.

இவ்வாறு சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள திலக் லொஜ்ஜில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவி திமுது ஆடிகல, தேசிய் அமைப்பாளர் சாவித்திரி போல்ராஜ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தனுஜா டி.சில்வா, செல்வி கிருஷ்ணன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சார்பாக நிர்மலநாதன் மேரி றஞ்சினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்.

யுத்தத்தின் போது நமதுநாட்டைச் சேர்ந்த பெண்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர். தற்போது யுத்தம் நிறைவடைந்து சுதந்திரம் பெற்றுவிட்டோம் என கோஷம் இடும் அரசாங்கம் யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எந்தவித உதவிகளையும் செய்ய முன்வரவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணமும் வேறு சில உதவிகளும் செய்வதாக அரசு கூறி சர்வதேசத்தை ஏமாற்றி வருகிறது.

யுத்தகாலத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் குறைந்தளவினரே தடுப்பு முகாமில் உள்ளனர். ஏனைய பெரும்பாலானவர்களின் நிலையென்ன என பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பதில் கூறவேண்டும்.

சந்தேகத்தின் பேரில் நடுத்தெருவில் வைத்து சுடப்பட்டவர்களின் குடும்பத்தினரின் நிலையென்ன? தந்தையை இழந்து வாழும் பிள்ளையின் வாழ்வுக்கு யார் உதவிபுரிவர்? போரினால்கணவனை இழந்த இளம்பெண்கள் சமுதாயத்தின் தவறான பார்வையால் துன்பத்தின் மேல் துன்பம் அனுபவித்துக் கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தாலும் அரசியல்வாதிகளினாலும் வழங்கப்படும் சில ஆயிரம் ரூபாய் பணம் எத்தனை நாளுக்கு அவர்களின் வாழ்க்கைக்கு உதவும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுயதொழில் செய்வதற்காக அரசாங்கம் உதவ வேண்டும்.

எனவே மனிதர்களை நம்புவதைவிட கொள்கைகளை நம்புவதே எமது வாழ்வுக்கு முன்னேற்றம் தரும்.

பெண்கள் ரீதியாக அரசாங்கம் அக்கறை கொண்டு உதவிகள் செய்ய முன்வர வேண்டும். போரின் போது பாதிக்கப்பட்டவர்களில் எண்பது வீதமானவர்கள் பெண்களே.

நாம் தமிழர்களாக பிறந்ததன் காரணத்தால்தான் இத்தகைய கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம். நாம் சிங்களப் பெண்களாக இருந்திருந்தால் எமக்கு இந்த நிலை ஏற்பட்டு இருக்காது.

எங்களையும் உங்கள் இனத்தவர்களாகவும் பாருங்கள். தமிழினப் பெண்களை கொடுமைப் படுத்தாதீர்கள். நாம் போரினால் பட்ட துன்பத்தை விட எமது பிள்ளைகளையும் சகோதரங்களையும் இழந்து கடும் துன்பப்படுகின்றோம். எமது வாழ்வுக்கு வழி அமைத்து தாருங்கள் என கேட்டுக் கொண்டனர். (ந-6)

# தேங்கி நிற்கும் வெள்ளத்தை ஓடச்செய்வதற்கு விசேட செயலணி

## யாழ்.மாநகரசபை முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே வெள்ளம் வீதிகளில் தேங்கி நிற்காது ஓடும் விதத்தில் சபைத் தொழிலாளர்கள் மூலமாக பெரும்பாலான வீதியோரங்களில் வளர்ந்திருந்த புற்கள் அகற்றப்பட்டு நிலம் மட்டுப்படுத்தப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பத்திரிகைக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மழைவெள்ளம் விரைவாக வழிந்தோடவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மக்களது வரிப்பணத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளை குறுக்காக வெட்டுவதனால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என்பது ஒருபுறமிருக்க, வீதிகளைக் குறுக்காக வெட்டுவதனால் வாகனப்போக்குவரத்துக்கு இடையூறும், வாகன விபத்துக்களுக்கும் அடிப்படையாக அமைந்துவிடும். வெட்டிய வீதிகளை மீளப்புனரமைப்பதற்கு அதிகளவு நிதி தேவைப்படுவதனால் தேவையற்ற நிதிச்சுமையை சபை எதிர்நோக்க வேண்டியதொரு நிலைமை ஏற்படுகின்றது.

வெள்ளம் வதிவிடங்களில் தேங்கி நிற்பதைத் தவிர்த்து அது ஓடக்கூடியவாறு தடைகளை வெட்டி அகற்றுவதற்கு சபையின் வேலைப்பகுதித் தொழிலாளர்களைக் கொண்ட விசேட செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே வெள்ளம் வீட்டில், அலுவலகத்தில், பாடசாலைகளில் தேங்கிநிற்கிறது, அது ஓடுவதற்கு தடைகள் இருக்கின்றன. தடைகளை வெட்டியகற்றி வெள்ளத்தை வடிந்தோடச் செய்யலாம் என்ற நிலைமை காணப்படின் அதுபற்றி 021 2222275, 0212222019, 0212228888, 0212223499, 0213207625 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு வெள்ளத்தின் தாக்கங்களை குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாநகர முதல்வர் கேட்டுள்ளார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



எல்லையற்ற, பிரபஞ்ம் தழுவிய அந்த தனித்தன்மையைப் பெற வேண்டுமானால், துன்பம் நிறைந்த இந்த உடற் சிறை என்னும் தனித்தன்மை அகல வேண்டும். நாம் உயிருடன் ஒன்றும் போது தான் மரணம் அகல முடியும். இன்பத்துடன் ஒன்றும்போது தான் துன்பம் அகல முடியும். அறிவுடன் ஒன்றும் போது தான் பிழைகள் அகல முடியும். இதுதான் அறிவியலுக்குப் பொருந்துகின்ற முடிவு. உடலைச் சார்ந்த தனித்தன்மை ஒருமாயை. இடைவெளியற்றுப் பரந்து நிற்கும் சடப் பொருளாகிய கடலில், தொடர்ந்து மாறிக்கொண்டே செல்லும் ஒரு சிறிய பொருள் தான் என் உடல் என்று அறிவியல் நிரூபித்து விட்டது. எனவே என் இன்னொரு பாகமான ஆன்மா அத்வைதம் (ஒருமை), என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியிருக்கிறது.

# இந்துமதக் கடவுள்களை வழிபடும் ஜப்பானியர்கள்

ஜப்பானின் அசாகுசா கோவில் இருக்கும் பகுதியில் மக்கள் கூட்டம் எப்பொழுதும் அலைமோதும். இக்கோவில் இருக்கும் பகுதிகளில் இந்து மதத்தை சேர்ந்த கடவுள்களுக்கும் கோவில்கள் இருப்பதால் இப்பகுதி எப்போதும் ஜேஜே என்று தான் இருக்கும். இங்குள்ள கோவில்களில் சோடன் எனும் பெயரில் கும்பிடப்படும் கடவுள் யார் தெரியுமா? நம்ம விநாயகர் தான். ஜப்பான் மொழியில் சோடன் என்றால் பரிசுத்தம் என பொருள்.


விநாயகர் மட்டுமல்ல சரஸ்வதி, சிவன், பிரம்மா மற்றும் குபேரன் போன்ற இந்துமத கடவுஸ்களுக்கும் வெவ்வேறு பெயர் சொல்லி கோவில் எழுப்பி வழிபடுகின்றனர்.

இதில் நிறைய ஜப்பானியர்கள் இந்து மதக் கடவுள்கள் என தெரிந்தே வழிபடுகின்றனர்.

இந்தியாவுக்கான ஜப்பான் நாட்டு முன்னாள் தூதர் யசுகனி இனோகி கூட பெரும்பாலான ஜப்பானியர்களின் வழிபாட்டு தெய்வங்கள் அனைத்தும் இந்திய கடவுள்கள் தான் எனக் கூறியுள்ளார்.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிகளில் சீனா மற்றும் பிற ஆசிய நாடுகளுக்கும் இந்தியாவில் உள்ள இந்துமதக் கடவுள்களின் உருவச் சிலைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இந்தியா வந்த சீன யாத்ரீகர்களும் இதற்கு முக்கிய காரணம் . இங்கிருந்து சீனா கொண்டு செல்லப்பட்ட உருவச் சிலைகள் மற்றும் பொம்மைகள் சீனப் பெயருடன் புத்த மதக் கடவுள்கள் என கூறப்பட்டு ஜப்பானில் இறக்குமதி செய்யப்பட்டன. புத்தமதம் தழுவிய ஜப்பானியர்களும் இந்துமதக் கடவுள்கள் என் தெரியாமல் கோவில் எழுப் பியும் வீட்டில் வைத்தும் வழிபட ஆரம்பித்த னர். இன்று வரை அந்த வழிபாடு தொடர்ந்து நடக்கிறது. (ஸ்ரீ-2)



தீபாவளிக்கு அடுத்த நாள், இந்தியாவின் வட மாநிலங்களில் "சோப்பா பூஜா" என்று இலட்சுமியை வணங் கும் விழா நடைபெறு வது வழமையாகும். இதற்காகமுன்பு கணக்குப் பதிவேடுகளில் வைத்து பூஜைசெய்வர். இப்பொழுது கணக் கெல்லாம் லப்டொப் களில் இருப்பதால் அதற்கே பூஜை செய் வதைப் படத்தில் காணலாம்.

# பாரதச் செய்திகள்

## ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறையே பக்கவாத நோய்க்கான காரணம்

(மும்பை)

ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை, புகைப்பழக்கம் உள்ளிட்ட காரணங்களே பக்கவாத நோய் ஏற்பட வழிவகுக்கிறது என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

உலக பக்கவாத நோய் எதிர்ப்பு தினம் கடந்த மாதம் 29 ஆம் திகதி இந்தியா உட்பட உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் பக்கவாத நோய் தடுப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.


இந்தியாவில் இந்நோய் அண்மைக் காலமாக அதிகரித்துவருவதாக டாக்டர்கள் கூறியுள்ளனர். முன்பெல்லாம் 50 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தான் பக்கவாத நோய் தாக்கும்.ஆனால் அண்மைக்காலமாக 20 இலிருந்து 30 வயதிற்குட்பட்டவர்களை இந்நோய் அதிகமாக தாக்கத் தொடங்கியுள்ளது. இந்நோயால் பாதிக்கப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் ஒரு இலட்சம் பேரில் தோராயமாக 130 முதல் 225 பேருக்கு இந்நோய் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. மேலும் இந்தியாவில் ஒரு நாளைக்கு 2 ஆயிரம் பேர் இந்நோயால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து டாக்டர்கள் கூறியதாவது; பக்கவாத நோய் குறித்த விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. இதனால் முறையான சிகிச்சை எடுக்க தவறிவிடுகின்றனர். இதனால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. மனித மூளையின் ஒரு பகுதி செயலிழப்பதால் பக்கவாதம் ஏற்படுகிறது. இதனால் உடலின் ஒரு பகுதி செயல் இழந்து உடல் உறுப்புகள் இயங்காமல் படுக்கையிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. பேச முடியாமலும் போகிறது. இதற்கு உரிய சிகிச்சை முறைகள் இருக்கின்றன.

ஆனால் இதுபற்றி மக்களுக்கு எந்த விழிப்புணர்வும் இல்லை. இந்தியாவில் தற்போது 14 இலட்சம் பேர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மும்பையில் தற்போதைய மக்கள் தொகை 1.3 கோடி. இவர்களில் 30 ஆயிரம் பேர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோயால் பாதிக்கப்படுபவர்களில் 30 முதல் 35 சதவீதம் பேர் உயிரிழக்க நேரிடுகிறது. இன்றைய கால கட்டத்தில் இளம் வயதினர் பக்கவாத நோயால் பாதிக்கப்படுவது அதிகரித்து வருகிறது.

ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை, உடலில் அதிகம் கொழுப்பு சேருவது புகைப்பழக்கம், மதுப்பழக்கங்கள் போன்றவை இந்நோய் ஏற்பட காரணமாகின்றன. எளிய உடற்பயிற்சிகள் கூட பலர் செய்வதில்லை. குறிப்பாக இப்போதுள்ள இளைஞர்கள், மோட்டார் சைக்கிளில் சென்று பழக்கப்பட்டு விட்டனர். சிறிய தூரம் சென்று வருவதற்கு கூட மோட்டார் சைக்கிள் இல்லை என்றால் ஏதோ இழந்துவிட்டதை போல் எப்போதும் கம்ப்யூட்டர், டிவி முன்பு உட்கார்ந்து விடுகின்றனர். உடம்புக்கு வேலை கொடுக்காததால் அவதிக்குள்ளாகின்றனர் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



மும்பையில் இடதுசாரிக் கட்சியினர், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருகையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.

## இமயமலையின் சீதோஷ்ண நிலையை ஆய்வு செய்யும் செயற்கைக் கோள்

இமயமலையின் சீதோஷ்ண நிலையை வானிலை ஆராய்ச்சியாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்ய உதவும் வகையில் , அமெரிக்க விண்வெளி நிறுவனம் (நாசா) , ''சேர்விர் என்ற ஒரு செயற்கைக்கோளை ஏவியுள்ளது. இதன்மூலம் இமயமலையின் தட்ப,வெப்பநிலை, பனி உருகுதல், வெள்ளப் பெருக்கு ஆகியவற்றை துல்லியமாக அறிந்து கொள்ளமுடியும்.

ஆட்டிக்,அந்தாட்டிக் போன்று இமயமலை உலகின் மூன்றாவது துருவம் என்று ஆராய்ச்சியாளர்களால் வர்ணிக்கப்படுகின்றது. ஏனெனில் ஒட்டுமொத்த புவியின் சீதோஷ்ண நிலையை நிர்ணயம் செய்வதில் இமயமலையின் சீதோஷ்ண நிலை பெரும் பங்கு வகிக்கிறது.

இமயமலையில் உருவாகும் நதிகளில் இருந்து கிடைக்கும் நீரை கிட்டத்தட்ட 130 கோடி மக்கள்பயன்படுத்துகின்றனர்.இமயமலையில் அவ்வப்போது ஏற்படும் சீதோஷ்ண மாற்றம் காரணமாக பெரும் வெள்ளம், பனிப்புயல் உள்ளிட்டவை தோன்று கின்றன. இதனால், இமயமலையை சார்ந்து வாழும் மக்களுக்கு பெரும்பாதிப்பு ஏற்படுகிறது.எனவே, இமயமலையின் சீதோஷ்ண நிலை மாற்றத்தை அவ்வப்போது ஆய்வு செய்வது முக்கியம் வாய்ந்ததாகும். இமயமலையை முழுவதுமாக வானிலை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்ய உதவும் வகையில் 'சேர்விர்' என்ற ஒரு செயற்கைக் கோளை அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா சமீபத்தில் ஏவியுள்ளது.

இந்த செயற்கைக்கோள் எடுத்து அனுப்பும் புகைப்படங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையின் இப்பகுதியில் செயல்படும் அரசுகள், முகவர்கள் வானிலை ஆய்வு மையங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

இந்த செயற்கைக்கோள் குறித்து நாசா அதிகாரிகள் கூறுகையில், சேர்விர் செயற்கைக் கோள் திட்டம், காத்மண்டுவில் செயற்படும் ஒருங்கி ணைந்த இமயமலை மேம்பாடு மையத்தின் துணையுடன் செயல்படுத்தப்படும்.பனிப்புயல், உயிரியல் வேறுபாடு பாதிப்பு வெள்ளம், மழை, வறட்சி ஆகியவற்றை இத் திட்டத்தின் மூலம் துல்லியமா[க] அறிந்துகொள்ளமுடியும்.

இந்த செயற்கைக்கோள் அளிக்க உள்ள தகவல்களின் அடிப்படையில் பனிக்கட்டி உருகுதல், இமய மலையின் சீதோஷ்ண நிலையினால் ஏற்படக்கூடிய இயற்கைப் பேரழிவு, எதிர்காலத்தில் கிடைக்க உள்ள தண்ணீரின் அளவு குறித்த தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம் என்றனர்.(ஸ்ரீ)

## தமிழக காங்கிரஸின் தலைவர் தங்கபாலுவை மாற்ற முடிவு

(சென்னை)

தமிழக காங்கிரஸ் தலைவரான தங்கபாலுவை மாற்ற வேண்டும் என்று முன்னாள் மத்திய மந்திரி ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பகிரங்கமாக மேடைகளில் பேசி வரும் நிலையில் தங்கபாலு மாற்றப்படுவாரா? இல்லையா? என்ற கேள்வி சில மாதங்களாக நீடித்து வருகிறது.

எதிர்நோக்கவுள்ள சட்டசபை தேர்தலைக் கருத்தில் கொண்டு தமிழக காங்கிரஸுக்கு புதிய தலைவர் நியமிக்கப்படலாம் என பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

மத்திய மந்திரி ஜி.கே.வாசனை தமிழக காங்கிரஸ் தலைவராக நியமிக்க மேலிடத்தில் பரிசீலிக்கப்பட்ட நிலையில் தலைவர் பதவி தனக்கு இப்போது வேண்டாம் என வாசன் கூறிவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனால் தங்கபாலு தலைவர் பதவியை மீண்டும் தக்கவைத்துக் கொள்ள மேலிடத்தில் முயற்சி எடுத்துள்ளார்.

இதையறிந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தனக்கு மீண்டும் தலைவர் பதவி வேண்டும் என டில்லியில் வற்புறுத்தி வருவதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழக காங்கிரசில் பல கோஷ்டிகள் இருப்பதால் யாரை தமிழக காங்கிரஸ் தலைவராக நியமிப்பது? அல்லது எந்த கோஷ்டியின் ஆதரவாளரை நியமிப்பது என்ற ஆலோசனையும் நடந்து வருகிறது.


இதனால் வாசன் அணியில் ஞானதேசிகன் எம்.பி.ப.சிதம்பரத்தின் அணியில் கே.எஸ்.அழகிரி, எம்.பி. விசுவநாதன் ஆகியோரும் தலைவர் பதவிக்கு முயற்சி செய்கின்றனர்.

இதையறிந்த வசந்தகுமார் எம்.எல்.ஏ.வும் தமிழக காங்கிரஸ் பதவிக்கு முயற்சி செய்துள்ளார். அகில இந்திய காங்கிரஸ் குழுக் கூட்டம் முடிந்த பின் வசந்தகுமார் 3 நாட்களாக டில்லியில் முகாமிட்டு தலைவர்களை சந்தித்துப் பேசி வந்துள்ளார்.

பீகார் தேர்தலுக்கு பின்னர் தமிழக காங்கிரஸ் தலைவர் பதவி மாற்றம் இருக்கும் என்றும் வரும் சட்டசபை தேர்தலை மனதில் கொண்டு புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

# மைக்கேய் மிரட்டல்; இலங்கை பணிந்தது

# அவுஸ்திரேலிய அணி ஆறுதல் வெற்றி



(பிரிஸ்பேன்)

மைக்கேய், ஸ்ராா்க்கின் துல்லியமான பந்துவீச்சு கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி தொடர்தோல்வியிலிருந்து மீண்டது.

எனினும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கையணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையணி ஒரேஒரு இருபது-20 போட்டி, 03 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் ஒரேஒரு இருபது-20 போட்டியில்வெற்றிபெற்ற இலங்கை அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது.

தொடர்ந்து நடைபெற்ற முதலிரண்டு ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இலங்கையணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இன்னிலையில் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று பிரிஸ்பேனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணிக்கு மைக்கேய் அச்சுறுத்தினார்.

ஆரம்பத்துடுப்பாட்டவீரர் டில்சான் ஒரு ஓட்டத்துடனும் அணித்தலைவர் சங்கக்காரா, ஜெயவர்த்தனா ஆகியோர் பூச்சியத்துடனும் மைக்கேயின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க இலங்கையணி 4.3 ஓவர்களில் 14 ஓட்டங்களுக்கு 03 ஆவது விக்கெட்டையிழந்தது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த தரங்க- சில்வா ஜோடி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தனர்.

இதில் உபுல் தரங்க 53 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து வோட்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க இலங்கை அணி 13.5 ஓவர்களில் 50 ஓட்டங்களை எடுத்து நான்காவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்களும் ஒற்றையிலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழக்க இலங்கையணி 32 ஓவர்களில் 115 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் சாமர சில்வா 72 பந்துகளில் (02 பவுண்டரிகள் உட்பட) 33 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் மைக்கேய் 09 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 33 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ஸ்ராா்க் 09 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வோட்ஷன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 116 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி கிளார்க்-ஹடின் ஜோடியின் சிறப்பான துடுப்பாட்டத்தின்மூலம் 21.4 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை



மாத்திரமிழந்து 119 ஓட்டங்களை குவித்து 08 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 51 பந்துகளில் (06 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 50 ஓட்டங்களையும் ஹடின் 31 ஓட்டங்களையும், வோட்ஷன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டில்கார பெர்னான்டோ 02 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணிஒருநாள்தொடரை முழுமையாக இழப்பதைத் தவிர்த்தது.


இப்போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழிசமைத்த மைக்கேய் தெரிவானார்.

தொடர் நாயகன் விருது இலங்கையணியின் லசித் மலிங்கவுக்கு வழங்கப்பட்டது.

# மாட்டீனிடம் மாட்டியது இந்திய அணி

# தோல்வியைத் தவிர்க்கப் போராட்டம்

கனி வில்லியம்ஸன்



(அகமதாபாத்)

மார்டீனின் அபார பந்துவீச்சில் சிக்கிய இந்திய அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேரமுடிவில் இரண்டாவது இன்னிங்ஸில் 82 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்து திணறுகின்றது.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 4ஆம் திகி அகமதாபாத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 487 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 331 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு வில்லியம்ஸன் - விக்டோரி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் அறிமுக வீரர் கனி வில்லியம்ஸன் 244 பந்துகளில் தனது முதலாவது போட்டியில் கன்னி சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி 400 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் கனி வில்லியம்ஸன் 299 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 131ஓட்டங்களுடனும் அணித்தலைவர் டானியல் விக்டோரி 41 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 417 ஓட்டங்களை எடுத்து 7ஆவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து களமிறங்கிய ஹோப்கிங், பட்டேல் தலா 14 ஓட்டங்களை தங்கள்பங்கிற்குப் பெறநியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பிரஜன் ஓஜா 4 விக்கெட்டுக்களையும் சகீர்கான், சிறிசாந்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங், ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த முதலே மார்டீன் பந்துவீச்சில் மிரட்டினார்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கௌதம் காம்பீர்பூச்சியத்துடன்மார்டீனின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் ஹேர்ப்சிவ்னிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து டிராவிட் களமிறங்க மறுமுனையில் சேவாக் ஒரு ஓட்டத்துடன் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டெண்டுல்கர் களமிறங்க மறுமுனையில் டிராவிட் ஒரு ஓட்டத்துடன் மார்டீனின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் ஹோப்கிவ்னிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 02 ஓட்டங்களை எடுத்து 03 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த டெண்டுல்கர்-லக்ஸ்மன் ஜோடி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தது.

எனினும் சச்சின் டெண்டுல்கர் 12 ஓட்டங்கள் எடுத்த போது மார்டீன் நேரடியாக போல்ட் முறையில் ஆட்டமிழப்புச்செய்து வெளி யேற்றினார்.

அடுத்து வந்த சுரேஷ் ரெய்னாவும் பூச்சியத்துடன் மார்ட்டீனின் பந்துவீச்சில் ரெய்லரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 15 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக லக்ஸ்மனுடன் இணைந்த தோனி பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்.

மார்டீன்



இந்த ஜோடி 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த போது அணித்தலைவர் தோனி 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ஹர்பஜன் சிங் நிதானமாகத் துடுப்பெடுத்தாட நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி 06 விக்கெட்டுக்களையிழந்து 82 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 34 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 12 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் மார்டீன் 13 ஓவர்கள் பந்துவீசி 07 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 25 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக்கைப்பற்றினார்.

இப்போட்டியின் 5 ஆவதும் இறுதி நாளான இன்று இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் இந்திய அணி தோல்வியிலிருந்து மீண்டு, போட்டியைச் சமனிலையாக்க போராடும் அதேவேளை நியூசிலாந்து அணி வெற்றிக்காக உழைக்கும்.

எனவே இன்றைய ஆட்டம் விறு விறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## ஹாங்காங் சிக்சர்ஸ் ஆஸி. சம்பியன்

(ஹாங்கொங்)

ஹாங்கொங் சிக்சர்ஸ் கிரிக்கெட் தொடரில் முதன்முறையாக அவுஸ்திரேலிய அணி சம்பியனானது.

ஹாங்கொங்கில் இலங்கை உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்ற ஹாங்கொங் சிக்சர்ஸ் கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் ஒவ்வொரு அணியிலும் தலா 06 வீரர்கள் விளையாடினர்.

### இலங்கை வெற்றி

நேற்று நடந்த 2-வது சுற்றுப் போட்டியில் இந்தியா-இலங்கை அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 04 ஓவரில் 02 விக்கெட்டுக்கு 91 ஓட்டங்களை எடுத்தது. பின்னர் களமிறங்கிய இந்திய அணி 04 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களையிழந்து 64 ஓட்டங்கள் மட்டுமெடுத்து தோல்வியடைந்தது.

### ஆஸி.அபாரம்

இரண்டாவது சுற்றில் அசத்திய தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இலங்கை அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பாகிஸ்தான் (எதிர்- தென்னாபிரிக்கா), அவுஸ்திரேலியா (எதிர்- இலங்கை) அணிகள் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இப்போட்டியில் இரு அணியினருக்கும் ஒரு ஓவருக்கு எட்டுப்பந்துகள் வீதம் தலா 05 ஓவர்கள் வழங்கப்பட்டன. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஷேக்சாத் 28 பந்தில் 92 ஓட்டங்கள் (08 சிக்ஸர், 10 பவுண்டரி) எடுத்து கைகொடுத்தார்.

பாகிஸ்தான் அணி 05 ஓவரில் 06 விக்கெட்டுக்கு 132 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் (35), மேக்ஸ்வல் (34), காா்டஸ் (31) கை கொடுத்தனர். அவுஸ்திரேலிய அணி 4.7 ஓவரில் 04 விக்கெட்டுக்கு 135 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. இதன்மூலம் முதன்முறையாக அவுஸ்திரேலிய அணி சம்பியனாகி சாதித்தது.

# ஆயிரம் பாடசாலைத் திட்டம் கூட்டத் திகதிகளில் மாற்றம்

## வடக்கு மாகாண க.ப. அறிவிப்பு

(திருகோணமலை)

மகிந்த சிந்தனையின் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப் படவுள்ள 110 பாடசாலைகள் தொடர்பில் கருத்துப்பரிமாறல் கூட்டம் நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மகிந்த சிந்தனையின் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 110 பாடசாலைகள் தொடர்பில் கருத்துப் பரிமாறுவதற்கு மதத் தலைவர்கள், அரசியற் தலைவர்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துப் பரிமாறல் கூட்டம் யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும், வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் (வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்) நாளை மறுதினம் புதன்கிழமை 9.30 மணிக்கு வவுனியா ஹொான்வென்ற் மகா வித்தியாலயத்திலும் நடைபெற விருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் (வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்) நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ரம்பைக்குளம் ஹொான் வென்ற் மகா வித்தியாலயத்திலும், யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியிலும் நடைபெறும்.

எனவே மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அபிவிருத்திச்சங்கச் செயலாளர்கள் மேற்படி திகதி மாற்றத்தினை அனுசரித்து கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-5)

# நீர்கொழும்பில் சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

நீர்கொழும்பு கிம்புலாப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு கிம்புலாப்பிட்டிய பெல்வேலான பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதான நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் சந்தேக நபர்களை கைது செய்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். என்ன காரணத்திற்காக இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதென்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. (ந-5)

# வாழைச்சேனையில் வெடிகுண்டுகள் மீட்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை வட்டவான் பிரதேசத்தில் நேற்றுக் காலை 7 மோட்டார் வெடிகுண்டுகள் மீட்கப் பட்டுள்ளன.

வட்டவான் பிரதேசத்தில் வெற்றுக் காணி ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி வருவதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-5)

# மாலு சந்தியில் விபத்து மாணவி படுகாயம்

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு மாலு சந்திப் பகுதியில் நேற்று மாலை 4மணியளவில் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் மாணவி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இவ்விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வநாயகம் ஒஷாந்தினி (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார். தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது. (ச-5)

# இந்தியாவின் யாழ்.துணைத்தூதராக ராஜதந்திரி மகாலிங்கம் நியமனம்

(சென்னை)

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இம்மாதத்தின் இறுதி நாட்களில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் இந்தியாவின் துணைத் தூதரகங்கள் இரண்டை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்க உள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இவ்விஜயம் எதிர்வரும் 25-28 ஆம் திகதி வரை என்று நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு உள்ளது. இரு தூதரகங்களுக்கும் ஆன தனித் தனி உதவித் தூதுவர்கள் இம் மாதம் நடுப் பகுதியில் கொழும்பு வருகின்றனர்.

யாழ்ப்பாண துணைத் தூதுவராக வி.மகாலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இந்தோனேசியா ,குரோசியா ஆகிய நாடுகளுக்கான இந்தியத் தூதரகங்களில் முன்பு கடமையாற்றியவர். தற்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவில் பணிப்பாளராக கடமையற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# போர்க் குற்றச்சாட்...

முயற்சிகளின் போது இலங்கை போர்க் குற்றங்களில் ஈடுபட்டதா என்பதனைக் கண்டறிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் ஹமரூன் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உரிய ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டால் அதற்குப் பதிலளிக்கத் தயார் என இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ந-5)

# இந்திய தலையீட...

டுத் தலைவர் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியாகவே இருப்பார் என கூறப் படுகின்றது.

ஏற்கனவே சீனாவுடன் உறவுகளை வளர்த்து வரும் இலங்கை அரசு தற்போது பாகிஸ்தானுடனும் நெருங்கிய உறவை ஏற்படுத்த முயற்சிப்பது இந்தியாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இலங்கைக்கு வரும் காலப்பகுதியில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இங்கு வருவதானது இலங்கை தொடர்பான இந்தியாவின் முடிபில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும் எனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். (ந-5)

# பிரபாகரன் இருப்...

துள்ளது.

பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும்,புலிகள் அமைப்பை மீள மைப்பதற்கு நிதி உதவிகளை வழங்குமாறும் கூறி நெடியவன் புலம் பெயர் தமிழர்களிடம் பணம் திரட்டியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார் ரொஹான் குணரட்ன.

நெடியவனின் இந்தப் பிரசாரத்துக்கு புலம்பெயர் தமிழ் மக்கள் செவி சாய்க்கவில்லை எனவும் தெரிவித்த அவர்,

தன்னார்வ அடிப்படையில் நிதி திரட்டுதல் மட்டுமன்றி போலியான கடன் அட்டைகள், காசோலை மோசடி, சட்டவிரோத ஆட்கடத்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத வழிகளிலும் பணம் திரட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# புதையல்...

குறித்த பிரதேசத்தில் டெம்பிட்ட விகாரை ஒன்று காணப்பட்டதாக சிங்கள ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

புதையல் கொள்ளையிடும் நோக்கில் பதினான்கு அடி ஆழத்திற்கு குழி தோண்டிக் கொண்டிருந்த வேளையிலேயே சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர். (ந-5)

# ஜனாதிபதி மகிந்த...

இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளோபல் தமிழ் போரம் மற்றும் சர்வதேச சட்டத்தரணிகள் சிலர் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் மாதத்தில் ஜனாதிபதி பிரிட்டன் செல்ல உள்ளதாகவும் இந்த விஜயத்தை இலக்கு வைத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பிரிட்டன் சட்டத்திற்கு அமைவாக வெளிநாடொன்றில் போர்க் குற்றம் மேற்கொண்டவர்களை அந் நாட்டில் கைது செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# மகிந்த-சம்பந்தன்...

அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் அழைக்கப்பட்டுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின்போது முக்கிய விவகாரங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்குமிடையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் இதன் அடிப்படையில் அதிகாரபூர்வமான முறையில் விரைவில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

அதேவேளை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எந்த நேரத்திலும் தயாராக இருப்பதாக சம்பந்தன் இச்சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஆயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக்காலத்தை பதவி ஏற்கவுள்ளதால் அந் நிகழ்வுக்குப் பின்னர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத் தரப்பில் விருப்பம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் இப் பேச்சுக்களை ஆரம்பித்துவிட வேண்டும் என்பதில் புதுடில்லி அதிக கரிசினை கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா கடந்த திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்து அரசாங்கத்துடன் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் கடந்த மாத இறுதியில் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக புதுடில்லி அழைத்து வரப் பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியாக கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந-5)


# மரண அறிவித்தல்

## வேலாயுதம் நடராஜா (DMO)

(முன்னாள் தலைவர் எழுவைதீவு முத்தன்காடு அருள்மிகு முருகவேள் தேவஸ்தான பரிபாலன சபை, முன்னாள் தலைவர் எழுவைதீவு கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், முன்னாள் செயலாளர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்)



எழுவைதீவு 2-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் நடராஜா 06.11.2010 சனிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் தையலம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சித்திரவடிவேல் இராசம்மா தம்பதியினரின் நேசமிகு மருமகனும் புஷ்பராணியின் பாசமிகு கணவருமாவார்.

கனகேஸ்வரி (அனலைதீவு),பரமசிவம் (சாமி) (உரிமையாளர் நியூ ஸ்ரீ திருப்பதி றேடர்ஸ் யாழ்ப்பாணம்),ரவிச்சந்திரன் (கனடா),அமரர் கேதீஸ்வரி,தனேஸ்வரி,குகச்சந்திரன் (குகன்), விக்னேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்கரன் (அனலைதீவு),பரமேஸ்வரி (ஆசிரியை,யா/திருக்குடும்ப கன்னியர்மடம்),அருள்கௌரி (கனடா),விஜயகுமாரன்(வவுனியா) ஆகியோரின் மாமனாரும், பிரஷாந், நந்துஷா, சானுஜா, சஜீவன், சதுஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2010) திங்கட்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக எழுவைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ம் வட்டாரம்,
எழுவைதீவு.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே.0773024195

(2819)



# உடன் தேவை

- கணனி தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள் (பெண்கள் )
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள் இரவுக் கடமை) நேரில்வரவும்.

வலம்புரி

இல. 3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.